
JC
031m211,NOSC
N30.1.1.
220458



திருவண்ணாமலைக் ...

ஓம்

திருச்சிற்றம்பலம்

# செந்தமிழ்ச் செல்வி


திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்

திங்கள்தோறும் வெளிவருவது.

சிலம்பு ௮ } மெய்கண்டான்யாண்டு-௭௱௨ ஆவணித் திங்கள் / 1930ஆ ஆகஸ்டுமீ—செப்டம்பர் { பரல் ௨


திருச்சிற்றம்பலம்

## திருவாசகம் - திருப்படையாட்சி.

### முதற்றிருவிருத்தமும் உரையும்*

கண்களிரண்டுமவன் கழல்கண்டு களிப்பன வாகாதே
காரிகையார்கடம் வாழ்விலென்வாழ்வு கடைப்படு மாகாதே
மண்களில்வந்து பிறந்திடுமாறு மறந்திடு மாகாதே
மாலறியாமலர்ப் பாதமிரண்டும் வணங்குது மாகாதே
பண்களிகூர்தரு பாடலொடாடல் பயின்றிடு மாகாதே
பாண்டிநன்னாடுடை யான்படையாட்சிகள் பாடுது மாகாதே
விண்களி கூர்வதோர் வேதகம்வந்து வெளிப்படு மாகாதே
மீன்வலைவீசிய கானவன்வந்து வெளிப்படு மாயிடிலே.

என்பது செய்யுள் என்னுதலிற்றோ வெனின் படையாட்சியோடு பாசறைக்கட் சென்ற தலைவன் சத்தனுதலால் அவன் வருவனென வுரைத்த பருவமும் வந்தது, அவனும் வருவன் என்றாற்றுவித்த பாங்கிக்குத் தலைவி அவன் வெளிப்படின் றனக்குளதாம் போகாநந்தப் பேற்றைக் கூறுதலை புணர்த்துதனுதலிற்று.

* இவ்வுரை திருத்தணிகை விசாகப்பெருமாளையரவர்களால் எழுதப் பெற்றது. இஃதோர் பழஞ் சுவடியினின்று மெடுத்துப் பதிக்கப் பெற்றுளது.

(இ - ள்) கலவனுருக்கொடு வலைவீசி மீனினைப் படுத்த சிவனெனும் தலைவன் வந்து வெளிப்படின் ஆண்டு என்னிரண்டு கண்களும் அவன் திருக்கழல் கண்டு களிப்பனவாகிய நிகழ்ச்சியு முளதாகாது. பிரிவறியாது தன் தலைவருடன் புணர்ந்து நிற்கும் ஏனை மாதர் வாழ்வினின்றும் என் வாழ்வு கடைப்படுமாறும் ஆகாது. இனி மண்ணுலகங்களின் வந்து பிறந்திடுமாறும் மறந்திடுமாறும் உளதாகாது. திருமாலறியாத் திருமலர்ப்பாதம் இரண்டினையும வணங்குது மென்று சொல்லுஞ் சொல் நிகழ்ச்சியும் உளதாகாது. களிப்பினை மிகத்தரும் பண்ணினைப் பொருந்திய பாடலோடாடல் பயின்றிடுமாறும் உளதாகாது. நல்வளநிறைந்த திருப்பாண்டி நாடதனையே திருப்படைவீடாக வுடை... படையாட்சிகள் பாடுதுமென்று சொல்லுஞ் சொல் நிகழ்ச்சி... தாகாது. இருமலமுடைய பிரளயாகலர் களிகூரத் தக்கதாக மா... சதுர்ப்புயத்தோடு வந்து வெளிப்படுமாறு வெளிப்படுதலும் உளதாகா...

ஆண்டு யான் சிவபோக மென்னுஞ் சிவாநுபூதி சொரூபியாகுவ னென்பதாம். ஈண்டுத் தலைவி சீவன் மூத்தன். தலைவன் சத்தருபிய பரமசிவன். பாங்கி திருவருளென அறிக. சைவாகமத்து முத்தியினும் மும்முதலு முண்டென்பதனுன் முத்தியினும் ஆண்டான் அடிமை இருக்க இவ்வாறு கூறலாகாதெனின், அறியாது கூறினாய், மல மாயா கன்மங்களோடு கூடித் திரோதப்பட்டுச் சனன மாணமுற்று வருமான்மா இருவினையும் ஒரு காலத்தே வந்து புசிக்கைக்குச் சமமுற்ற எல்லையிற் போன பலகோடி பவங்களிலே செய்துவந்த சரியா கிரியா யோகத் தவப்பயனுன் மலபரிபாகப்பட்டுச் சிவஞானத்தைப் பெற்றுத் திருவருள்தாரகமாக நின்று சீவகரணங்க ளெல்லாஞ் சிவகரணங்களாய்ச் சிவனோ டொன்ருய்ச் சாயுச்சியமாவன்; சாயுச்சிய மாமிடத்து வேருய் நின்று கலப்பின் கலத்த லின்மையானும் அப்பொடு கலந்த உப்புப் போல வேறற நின்று சாயுச்சியமாவன்; ஆனவிடத்து மூன்று முதலுமிருக்கினு மவை முன்பு போலச் சீவித்து நிற்பனவுஞ் செய்யாமனிற்கும்; நிற்கவே ஆன்மா சிவனோடு அத்துவிதமாய் நிற்பனுதலால் ஆண்டு சிவனையுஞ் சுட்டி யறியான். இது இதுவென்று சுட்டியறியப்பட்டன வெல்லாம் விடயமாய்ப் பொய்ப்பொருளாமாதலின் அவ்வாறு அவை பொய்ப்பொருளென அறிந்த விடத்தே சுட்டற்ற உண்மையாகிய சிவ சொரூபமாவன்; அங்ஙனஞ் சிவரூபனுன முத்தாத்மாவினுலே இவ்வாறு சுட்டியறிதலின்ருமாதலின் இவ்வாறு கூறுதலாமெனக் கொள்க. இதனைச் சிவஞான போதம் - அ-கூ-ய-யக ஆஞ் சூத்திரங்களாலும் இந் நான்கு சூத்திரங்களின் பொருள்களை விரித்துச் சித்தியார் செப்பிர



காசங்களிற் கூறிய திருவிருத்தங்களாலும் அறிக. ஏகாரங்களீற்றசை. தேற்றமெனினும் அமையும். அன்றி வினுவாகக் கொண்டா மெனப் பொருள் கொள்ளின் காரிகையார்கள் தம் வாழ்வி லென் வாழ்வு கடைப்படுமோகாதே யென்பதைத் திலதருப்பணஞ் செய்யல் வேண்டும். இது முதலிய பல குற்றங்களுண்டாம். அவற்றை விரிப்பிற் பெருகு மென்றொழிந்தாம்.

இச்செய்யுளிற் கூறப்படு மாகாதென்னு மொழிகட்கு ஆமெனப் பொருள் கூறின் ஆகாதோ வெனின் ஆகாது, என்னெனின், யாண்டும் எதிர்மறையை யுடன்பாடாகக் கூறுதற் கிலக்கண மின்மையின். செய்யா வென்னும் முன்னிலை யொருமை யேவலெதிர்மறை வினைமுற்றை உடன் பாட்டு வினைமுற்ருகப் பொருள் கொள்ளுதல் போல் இதனையும் பொருள் கொள்ளுதல் ஆகாதோ வெனின் ஆகாது; என்னெனின் அதனை எதிர்மறை வினைமுற்ருகப் பொருள் கொள்ளு மிடத்து எதிர்மறை யாகார மிடையிற் புணர்ந்து கெட்டு நின்றதாகவும் உடன்பாட்டு வினை முற்ருகப் பொருள் கொள்ளுமிடத்து அவ்வெதிர்மறையாகாரம் வேண்டாது நிற்பதாகவும் கொள்ளுதலானும் இதனிடத்தில் எதிர்மறை யாகாரம் புணர்ந்து நிற்ற லுடன்பாடாகக் கொள்ளுதற் கேலாமை யானு மென்க.

கண்களிரண்டாவன - ஞானக் கண்ணும் ஊனக்கண்ணுமாம். ஏனையவற்றை விரித்துக்கடாவிடைகளாகக் கூறுதற்கிஃ தமையம் அன்றென விடுத்தனம்.

---

# நம்பியாண்டார் நம்பிகள் சரித்திரம்.

[திரு. S. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் B.A., L.T.[

சைவத்திற் குயிர்த்துணையாஞ் சமயகுர வரின்மூவர் சாற்று பாவும்
மெய்வைத்த திருத்தொண்டர் வரலாறும், மேதினியில் விளங்க நல்கி,
உய்வைத் தருந்தெய்வத் திருமுறைகள் வகுத்தருளி, உயர்நூல் செய்து
ஐவைத் தடுத்தாளு நம்பியாண் டார்நம்பி நற்ருள் போற்றி.

சைவசமய விளக்கத்திற்குப் பெருந்துணை புரிந்த பெரியாராகிய நம்பியாண்டார் நம்பி என்பவர், இற்றைக்குச் சுமார் 950 ஆண்டுகளுக்கு முன்பு, திருநாரையூரிலே ஆதிசைவகுலத்திலே திருவவதரித்தார். அவர் நாளில் அரசு புரிந்த சோழமன்னர் முதலாவது ராஜராஜ சோழர் (கி. பி. 985 முதல் 1013

வரை). சிவபத்தி சிவனடியார் பத்தியிற் சிறந்த இவ்வரசர் ஆட்சி தொடங்கிய காலத்தில் மூவரருளிய தேவாரப் பதிகங்களில் மிகச்சிலவே அருமையாக உலவி வந்தன. அவர் எல்லாப் பதிகங்களையும் பெறுதற்காகத் தேடியும் காணாது வருந்தியிருந்தார்.

இது இங்ஙனமாக, நம்பியாண்டார் நம்பி உபநயனஞ் செய்யப்பெற்று வேதாகம முதலிய கலைகளைப் பயின்று வருகையில் ஒருநாள் அவரது தந்தையார் திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையாருக்குப் பூசை செய்யும் பொறுப்பை நம்பிகளிடம் ஒப்பித்து ஒரூருக்குச்சென்றார். நம்பிகளும் பிள்ளையாருக்கு நீராட்டு முதலியனசெய்து, நிவேதனத்தைத் திருமுன்பு வைத்து, "எம்பெருமானே! திருவமுது செய்தருளும்" என்று வேண்டினார். பிள்ளையார் சும்மாவிருந்தது கண்டு, நம்பிகள் வருந்தித் தமது தலையை மோதப் புகும்போது, பிள்ளையார் "நம்பி! பொறு" என்று தடுத்து நிவேதனத்தை அமுது செய்தருளினார். பின்னர், நம்பிகள் பள்ளிக்கூடத்திற்குப் போவதைத் தவிர்த்துப் பிள்ளையாரிடமே பாடமோதி வந்தார். அவர்மீது **திருவிரட்டை மணிமாலை** என்னும் நூலொன்றும் பாடினார்.

இவ் வருமையெல்லாங் கேட்டறிந்த ராஜராஜ சோழர் திருநாரையூருக்குச் சென்று, அவ்வூரிலும் அதைச்சுற்றிப் பத்துக்காத தூரத்தளவிலும் பரவ நிறைத்த நிவேதனப் பொருள்களை யெல்லாம் நம்பிகள் மூலமாகப் பொல்லாப் பிள்ளையாருக்குத் திருவமுதாக்கி, மூவர் தேவாரங்களும் நாயன்மார் வரலாறுகளும் உலகத்தில் விளங்கும்படி செய்யவேண்டுமென்று நம்பிகளிடம் விண்ணப்பித்தார். நம்பிகள் அவ்வேண்டுகோளைப் பொல்லாப் பிள்ளையாரிடம் செய்யவே, அவர், தேவாரப் பதிகங்கள் சிதம்பரத்திற் கனகசபைக்குப் புறக்கடையின் பக்கத்தில் மூவர் திருக்கரங்களின் அடையாளமுடைய ஓர் அறையில் உள்ளன என்று நம்பிகட்கு உணர்த்தி, நாயன்மார் வரலாறுகளையும் கூறியருளினார்.

நம்பிகள் தேவாரமிருக்குமிடத்தை அரசருக்குரைக்க, அவர் நம்பிகளோடு சிதம்பர மடைந்து, பொல்லாப் பிள்ளையார்

220458



அருளிப்பாட்டைத் தில்லை வாழந்தணர்கட்குத் தெரிவித்து, தேவார ஏடுகளை வெளிக்கொண்டு வரவேண்டினார். அவர்கள் சமயகுரவர் மூவர்களே வந்தாலன்றி அறையைத் திறக்க முடியாது என்றார்கள். அரசர், மூவர் திருவுருவங்களுக்குத் திருவிழா நிகழ்த்தித் திருமுறை யிருக்கும் அறையின் முன்னே எழுந்தருளப் பண்ணினார். பின்பு அறை திறக்கப்பட்டது. ஆனால் ஏடுகளில் பெரும்பகுதி செல்லால் பழுதுபட்டுக்கிடந்தது. அரசர் மிகவும் வருந்துகையில், "தேவாரப் பதிகங்களில் இக்காலத்திற்கு வேண்டியவற்றை மட்டும் வைத்துள்ளோம்" என்று ஒரு அசரீரி மொழி பிறந்தது. அரசர் மகிழ்ந்து நம்பிகளைக் கொண்டு தேவார முதலிய திருவருட்பாக்களை யெல்லாம் 11 திருமுறைகளாக வகுப்பித்தார். பின்பு நம்பிகள், நாயன்மார்கள் சரித்திரங்களைச் சுருக்கிக் கூறும் **திருத்தொண்டர் திருவந்தாதி** என்னும் நூலையும் மற்றும் ஒன்பது நூல்களையும் பாடியருளினார். இவை பத்தும் அரசர் வேண்டுகோளின்படி, பதினோராந் திருமுறையிற் சேர்க்கப்பட்டன.

பின்பு தேவாரப் பதிகங்கட்குப் பண்ணடைவு பெற விரும்பி அரசரும், நம்பிகளும் திருவெருக்கத்தம்புலியூருக்குச் சென்று சிவபெருமானிடம் கருத்தை விண்ணப்பித்தார்கள். உடனே, யாவருங் கேட்க வானத்தில் "திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபின் வழிவந்த பெண்ணொருத்திக்குப் பண்களை அருளிச் செய்தோம்" என்றோர் அசரீரி பிறந்தது. அப்பெண்ணை வரவழைத்துத் தேவாரப் பண்களைக் கேட்டு மகிழ்ந்தார்கள். அப்போது, "இவளைக் கனகசபைக்கு முன் கொண்டுபோய்த் தேவாரப் பதிகங்கட்குப் பண்வகுக்க" என்று மற்றோர் அசரீரி வாக்கு எழுந்தது. நம்பிகளும் சோழரும் அவ்வாறே செய்து முடித்தார்கள்.

இவ்வாறு ராஜராஜ சோழருக்கு உறுதுணையாய் நின்று ரத் திருமுறைகளையும் நாயன்மார் சரிதங்களையும் வெளிப்படுத்தியும், திருமுறை வகுத்தும், அருமையான நூல்களியற்றியும், சைவசமயத்திற்குப் பேருதவி புரிந்தருளிய மூர்த்திமானவர், இந்த நம்பியாண்டார் நம்பிகள். இப்பெரியார் ஒரு

வைகாசித் திங்களில் புனர்பூச நன்னாளில் பொன்னம்பலவர் திருவடிநீழலடைந்தார். ஆகையால் ஆண்டுதோறும் அந்நாளை மெய்யன்போடு கொண்டாடுதல் நன்றியறிவுடைய சைவ நன்மக்களனைவருக்கும் உரிய கடமையாம்.

திருநாரையூர், சிதம்பரத்துக்குத் தென்மேற்கே 10 மைல் தொலைவிலுள்ளது. மூவர்களாலருளிச் செய்யப்பட்ட தேவாரப் பதிகங்களின் தொகை 1,30,000. இப்போதுள்ளவற்றின் தொகை 795.

---

# 'கண்ணப்பனொப்பதோர்' என்னுந் திருவாசகத்தின் விரிவுரை

அல்லது

# மணிவாசகரும் கண்ணப்பரும்

(தமிழ்ப்புலவர் திரு. அ. மு. சரவண முதலியாரவர்கள்)

***"கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை கண்டபின்***
***என்னப்ப னென்னொப்பி லென்னையு மாட்கொண்டருளி***
***வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்***
***சுண்ணப்பொன் னீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ."***

(திருவாசகம்-கோத்தும்பீ)

இஃது, அன்புடன் ஓதுவாரது ஊனை உருக்கி உணர்வைப் பெருக்கி, மனத்தைக் கரைத்து மலத்தைக் கெடுத்துத் தேனும் பாலுந் தீங்கன்னலுமமுதுமாய்த் தித்தித்துக் கருவாசம் போக்குந் திருவாசகமென்னும் ஒப்புயர்வற்ற திப்பிய தேனாற்றின் ஒரு துளியாகும்.

இதன் பொருளை விரித்து 'மணிவாசகனார் கண்ணப்பர் அன்பினை எடுத்துப் பாராட்டியதன் கருத்தென்னை?' என்பதூஉம் பிறவும் ஆய்ந்து முடிவு கட்டுவதே இக்கட்டுரையின் கருத்தாகும்.

**இதன் பொருள் :**—கண்ணப்பன்=கண்ணப்ப நாயனாரின், ஓர்=ஒப்பற்ற, (அன்பு உண்மை) ஒப்பது=அன்புண்மை போல்வதாகிய, (என்) அன்பு இன்மை=அடியேனது அன்பின் இன்மையை, கண்டபின்=அறிந்த பின்னும், என் ஒப்பு இல்=(அன்பின்மையில்) எனக்கு ஒப்பாவார் எவரும் இன்மையைப் பெற்ற, என்னையும்=அடியேனையும், ஆள்கொண்டு=(திருப்பெருந்துறையில்) அடிமையாகக் கொண்டு, அருளி=ஞானோபதேசஞ் செய்தருளி, வண்ண=அழகு பொருந்த, என்னை வா என்று பணித்த=அடியேனைத் தில்லைக்கு வரக்கடவாயென்று கட்டளையிட்டருளிய, வான்கருணை=பேரருளையுடைய, என் அப்பன்=எனது உயிர்த் தந்தையாகிய, பொன்=பொன்போலுந் திருமேனியின் கண், சுண்ணம்=பொடியாகிய, வெண்மை நீற்றற்கே=வெண்ணீறணிந்த சிவபெருமானுக்கே, கோத்தும்பீ=அரசவண்டே, சென்று ஊதாய்=நீ போய்ப் பாடுவாயாக; என்றவாறு.

'கண்ணப்பன்' எனவும், 'அன்பின்மை' எனவும் வந்ததனால், 'என்' என்பதும், 'அன்புண்மை' என்பதும் வருவித்து உரைக்கப்பட்டன. 'ஒப்பது' ஈண்டு மறுதலையுவமை; அது, 'அவன் எப்படி நல்லவர்களிற் சிறந்தவனோ, அது போலவே யான் தீயவர்களிற் சிறந்தவன்' என்புழிவரும் 'அது போல' என்பது போல்வது; 'கெடுப்பதூஉம்' என்னுந் திருக்குறள் விளக்கவுரையில் 'ஆங்கு, மறுதலையுவமம்' என்றார் பரிமேலழகர். உம் தொகுத்தல். 'என்னொப்பில் என மறித்துங் கூறியது', அன்பின்மையில் தமக்கு நிகராவார் யாருமில்லை என்பதை யாப்புறுத்தற்கு. 'என்னையும்' என்ற இழிவு சிறப்பும்மையால், அன்பின்மையால் அவனால் ஆட்கொள்ளப்பெறுந் தகுதியற்ற தமது இழிவைப்புலப்படுத்தினார்; என்னை? 'பத்திவலையிற்படுவோன்' என்றும், 'யாவராயினு மன்பராலன்றி யறியொணா மலர்ச்சோதியான்' என்றும் அம்மணிவாசகரே அருளுதலாலென்க. அங்ஙனம் தகுதியற்ற தம்மை ஆட்கொள்ளுதலே அடாது; எனினும் ஆட்கொண்டான் என்பது தோன்ற 'ஆட்கொண்டு' எனவும், அவ்வாறு ஆட்கொள்ளினும் பன்னிரண்டு ஆண்டுகள் வரையும் தந்தகுதியை நன்கு ஆராய்ந்து, அஃதின்றேல் உளதாக்கி உபதேசிக்க வேண்டுமென்னும் அறிவுநூற் சட்டத்திற்குமாறாக

உடனே உபதேசித்தருளினானென்பது தோன்ற 'அருளி' எனவும் கூறியருளினார். இஃது ஆண்டவன் அந்தணகுலக்குரவனாய் எழுந்தருளித் திருப்பெருந்துறையின்கண் அடிகளை ஆட்கொண்டு திருவைந்தெழுத்தை முறைப்படி உபதேசித்தருளின வரலாற்றைக் குறிப்பதாகும்; இதற்குத் திருவாசகத்தின்கண் அகச்சான்றுகள் நிறைய உள்ளன. ஆண்டுக் காண்க. அழகு அனைத்திலும் சிறந்த பிறவி நீங்குதலாகிய பேரழகினைத் தமக்கு அருளுதற்குத் 'தில்லைக்குவரக் கடவாய்' எனப்பணித்தருளினான் என்பது தோன்ற, 'வண்ணப்பணித்தென்னை வாவென்ற' என்றார்; 'வண்ணமாக' எனற்பாலது 'வண்ண' எனத்திரிந்து நின்றது; "யான் நற்குணமுடையவனுமாறு" எனப் பொருளமைத்துக் கூறினும் கருத்தில் வேறுபாடின்மை அறிக; "தில்லைத்திருக்கூத்தைக்கண்டு யான் பிறவி நீங்கலாகிய பெருநலமுற்றேன்" என அடிகள் கூறுவதைக் 'கண்டபத்'திலும், 'குலாப்பத்'திலும் பரக்கக்காண்க. 'தில்லைக்கு வரக்கடவாய்' என்றதை 'நாயினேனை நலமலிதில்லையுட் கோலமார் தருபொதுவினில் வருக' என்னுந் திருவாசகத்தாலுணர்க; இதுவும் அவர் வரலாறு குறித்ததாகும். 'பணித்து வாவென்ற' என்பது 'வாவென்று பணித்த' என விகுதி பிரித்துக் கூட்டப்பெற்றது. இத்துணைக்கும் அவன் எண் குணங்களுட் சிறந்ததாகிய பேரருளுடைமையே காரணமென்பது தோன்ற 'வான்கருணை' என்றார். இங்ஙனம் தம்மை ஆட்கொண்டருளியதற்குக் காரணம் அவன் பெருங்கருணையே அன்றிக்கடமையுமாகும் என்பதைக் குறிக்க 'என்னப்பன்' என்றார்; என்னை? சிற்றறிவும் சிறு தொழிலுமுடைய உடற்றந்தையும் நெறியல்லா நெறிசெல்லும் தன் புதல்வனை ஆட்கொண்டு நன்னெறிப்படுத்தித் தன் பொருளை அவனுக்கு அளித்தல் தன் கடமை என்று கருதி அங்ஙனம் செய்தல் கண்கூடாகலின். 'பொன் சுண்ணநீற்றற்கே' என்றது ஆண்டவன் ஆசிரியக்கோலத்துடன் வந்து ஆட்கொண்டருளிய ஞான்று காட்டிய திருவுருவத்தின்கண் ஈடுபட்ட வாதவூர் வள்ளல் இடையறாது அவ்வழகு வடிவத்தைத் தம் முள்ளத்தின்கண் வைத்து வழுத்துவதைக் குறிப்பதாகும்; இவ்வுண்மையை,



'எந்தமை யாண்ட பரிசது பகரின்
ஆற்ற லதுவுடை யழகமர் திருவுரு
நீற்றுக்கோடி நிமிர்ந்து காட்டியும்'

என வரூஉம் அடிகளின் கூற்றாலே அறிக. அவ்வடிவம் கண்கவர் வனப்பினதாகலின் அடிகள் பின்னும் பல விடங்களிற் கூறியருளுவர்; அவற்றுட் சில,

'நீறுபட்டே யொளிகாட்டும் பொன்மேனி நெடுந்தகையே'

'ஒண்மையனே திருநீற்றை உத்தூளித்தொளி மிளிரும்
வெண்மையனே'

"செய்யா வெண்ணீறாடி"

"வெண்ணீற்றர் செம்மேனியர்"

"துப்பனே தூயாய் தூயவெண்ணீறு
துதைந்தெழு துளங்கொளி வயிரத்
தொப்பனே"

என்பன. ஆண்டவனது அழகு வாய்ந்த இவ்வொளி வடிவத்தில் ஈடுபடாத பெரியார் யாருமிலர்.

"பவளம்போன் மேனியிற்பால் வெண்ணீறும்"

என்பது ஆளுடைய அரசின் அருளிப்பாடு.

"செம்மேனி வெண்ணீற்றான்"

என்பர் சேக்கிழார் பெருந்தகை.

"அவ்வப்போது ஒரு கண நேரம் சத்தியத்தின் தோற்றத்தைக்கண்டது கொண்டு, அதன் அளவில்லாத ஒளியினியல்பை யாம் அறிந்து கொள்ள முடியாது. நாம் தினந்தோறும் பார்க்கும் சூரியனுடைய பிரகாசத்தைவிடக் கோடி மடங்கு ஜோதியுடையது சத்தியம். அந்தப் பரஞ்சோதியில் நான் கண்டது அணுவிலும் அணுவான ஒளிக்கிரணமேயாகும்" என்பது நிகழ் காலப்பெரியனாராகிய 'காந்தியடிகள்' திருவாக்கு.

பொன், உவமையாகுபெயர்; அதனை நீற்றுக்கு அடையாக்கினும் பொருந்தும். ஏகாரம், பிரிநிலை.

சோலை முதலிய பல இடங்களில் இன்னொலி எழுப்பிக்கொண்டு தன்னியல்பிற் பரந்து திரியும் வண்டினை நோக்கி

'வண்டே! நீ பல விடங்களிலும் சென்று சென்று பொருள் சேராத புகழினையுடைய பலரையும் உன் இன்னிசையாற் பாடிவாணாளை வீணாளாக்காது, இசை விருப்பனாகிய எம்பெருமான் திருமுன் சென்று அவன் பொருள்சேர் புகழைப் பாடுவாயாக' என்பார் "சென்றூதாய் கோத்தும்பீ" என்றார்; என்னை? 'நிற்பனவும் இயங்குவனவுமாகிய அனைத்தும் அவ்வவைகட்குரிய கரணங்களால் ஆண்டவனையே வழிபட்டு அழியாத இன்பத்தைப் பெறவேண்டும்' என்னுங் கனிந்த கருணை யுடையவராகலின் என்க. பெரியார் கருத்து அதுவே யாகுமென்பதை "ஞாலநின் புகழேமிக வேண்டுந் தென்னாலவாயிலுறையு மெம்மாதியே" என்னும் ஞான சம்பந்தப் பெருந்தகையாரின் நற்றமிழாலறிக. அரசன் எவ்வொழுக்கத்தை மேற்கொண்டொழுகுகின்றானோ அதனையே குடிகளும் மேற்கொள்ளுதல் கண்கூடாகலானும், 'அரசனெவ்வழி குடிகளவ்வழி' 'மன்னவனெப்படி மன்னுயிரப்படி' என்பன பழமொழிகளாகலானும், ஏனைய வண்டுகளையும் அந்நெறிப்படுப்பான் அரசவண்டை நோக்கிக் "கோத்தும்பீ" என விளித்த அருமை அடிகளின் கனிதரு முள்ளத்தை நமக்குக் காட்டிக் களிப்பிக்கின்றது.

இனி, இற்றை நாள் உயிர் நூற்புலவர் 'தேனீக்களில் இராணித் தேனீ என ஒன்று உண்டென்றும், அது யாதொரு அலுவலுஞ் செய்யாது 'கும்' என்று ஒலி செய்து கொண்டே இருக்குமென்றும் ஆய்ந்து முடிவுகட்டி யிருக்கின்றனர். நமது மணிமொழியார் 'கோத்தும்பீ' என விளித்ததை நோக்கின் அவர் உயிர்நூற் புலமையும் வாய்ந்திருந்தார்' என்பது தெற்றென விளங்கும்.

இனி, 'ஒப்பது' என்பதை மறுதலையுவமையாகக் கொள்ளாது 'கண்ணப்பர் அன்புபோலத் தமக்கு அன்பில்லை' என அடிகள் கூறினார்' எனக் கொள்ளிற் போந்த இழுக்கென்னை யெனின், அது கண்ணப்பரினும் சிறிதோ, அன்றிப் பெரிதோ குறைந்த அன்பு தம்மிட மிருப்பதாக அடிகள் கருதினாரெனப் பொருள் தருமன்றி, அறவே தம்மிடம் அன்பில்லை



என அவர் கருதினாரென்னும் பொருள் தராது; எவ்வாறெனின், பெருஞ் செல்வமுடைய சாத்தனைக் குறித்துக் கொற்றன் "சாத்தனைப்போல என்னிடம் பொருளில்லை" எனக் கூறின், சாத்தன் பொருளினுஞ் சிறிது குறைந்தோ, அல்லது பெரிது குறைந்தோ பொருள் கொற்றனிட மிருக்குமெனப் பொருள் தருமன்றி, 'அறவே பொருளில்லாதவன் கொற்றன்' எனப் பொருள் பயவாமை போல. எனவே ஆளுடைய அடிகள் தம்மிடம் கண்ணப்பர் அன்பினுங் குறைந்த அன்பு இருப்பதாகக் கருதினாரென்றால் அது,

"ஆடுகின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை"
"அலவா நிற்கு மன்பிலேன்"
"நெகு மன்பில்லை நினைக்காண"
"இல்லை நின்கழற் கன்ப தென்கணே"
"நான்றனக் கன்பின்மை நானுந் தானுமறிவோம்
தானென்னையாட் கொண்ட தெல்லாருந் தாமறிவர்"

என அடிகள் தம்மிடம் அன்பென்பது சிறிதுமில்லையென அருளிய மணிமொழிகளோடும்,

"நின்றன் வார்கழற் கன்பெனக்கு நிரந்தரமாயருளாய்"
"இடையறா வன்புனக்கென், னூடகத்தே நின்றுருகத்தந்தருள்"
"அன்புநின் கழற்கணே புணர்ப்ப தாக"
"மெய்கலந்த அன்பரன் பெனக்குமாக வேண்டுமே"
"வேண்டும் நின்கழற் கணன்பு"
"மெய்யன்பை யுடையாய் பெறநான் வேண்டுமே"
"தொண்டனேற்கு முண்டாங்கொல் மிக்க வன்பேமேவுதல்"
"பெறவே வேண்டு மெய்யன்பு"
"அடியா ருனக்குள்ளவன்புந் தாராய்"

என அடிகள் ஆண்டவன் திருமுன் 'அன்பு வேண்டும்; அன்பு வேண்டும்.' என்று குறையிரந்து வேண்டிய மணிமொழிகளோடும் மலையுமாறு காண்க.

இனி, 'ஒப்பது' என்பதனை மறுதலையுவமையாகக்கொண்டு,

'கண்ணப்பர் எங்ஙனம் அன்புண்மையிற் றலைசிறந்து நின்றாரோ அங்ஙனமே யான் அன்பின்மையிற் றலைசிறந்து நிற்கின்றேன்' எனக் கருத்தமைப்பின் மேற் காட்டிய மணிமொழிகளோடு மலையாது ஒத்து நிற்றலையுங் காண்க.

எனவே, இச்செய்யுளால் அடிகள் கருத்தாகப் பெறப்படுபவை, கண்ணப்பர் அன்பு உண்மையால் தலைவரானதுபோலத் தாம் அன்பின்மையாற் றலைவரென்பதூஉம், அதனால் ஆண்டவனால் ஆட்கொள்ளப் பெறுந்தகுதி தமக்கு இல்லை யென்பதூஉம், அங்ஙனமிருக்கவும் தம்மை அவன் ஆட்கொண்டதற்குக் காரணம் அவன் பெருங்கருணையே என்பதூஉம் பிறவுமாம். இவற்றை நிரலே எடுத்து ஆராய்வோம். (தொடரும்.)

---

# பண்டைத் தமிழ்ச் சொற்கள்

[திரு. M. V. நெல்லையப்ப பிள்ளையவர்கள் B. A.]

## முதல்வன். (௭)

கடவுளைக் குறிக்கும் பண்டைத் தமிழ்ச் சொற்களில் முதல்வன் என்னும் சொல் ஒன்று. அதில் என்ன கருத்துக்கள் அடங்கியுள்ளன என்று இந்தக் கட்டுரையில் கருதப்படும்.

2. முதல்வன் என்ற சொல் முதன்மை என்னும் பண்புப் பெயர் அடியாகப் பிறந்த உயர்திணை ஆண்பா லொருமைப் படர்க்கைப் பெயர்ச்சொல். முதன்மை என்ற சொல்லில், ஈற்றுமை கெட்டு முதல் என நின்று, அத்துடன் வகர ஒற்று எழுத்துப் பேறும் அன் என்ற படர்க்கை ஒருமை ஆண்பால் விகுதியும் சேர்ந்து முதல்வன் என ஆயது. முதன்மை என்பது அஃறிணை ஒன்றன்பாற் படர்க்கைக் குறிப்பு வினை முற்றாக வரும்பொழுது முதற்று எனவும், அஃறிணைப் பலவின்பாற் படர்க்கைக் குறிப்பு வினைமுற்றாக வரும்பொழுது முதல என்றும் வரும். 'அகர முதல வெழுத் தெல்லாமாதி பகவன் முதற்றே யுலகு' என்னும் குறளில், இந்த இரண்டு குறிப்பு வினைமுற்றுகளும் வருதல் காண்க.



3. முதல்வன் எனவே எவருக்கு முதல்வன் அல்லது எவைக்கு முதல்வன் அல்லது எவருக்கும் எவைக்கும் முதல்வன் என்ற கேள்விகள் அச்சொல்லை ஆராய்கிறவனது உள்ளத்திலே தோன்றும். அக்கேள்விகளுக்கு விடைகள் "அகர முதல வெழுத் தெல்லாம்" என்ற திருக்குறள் வசனத்தாலும், "அகர வுயிரின்றேல் அக்கரங்களின்றாம்" என்ற சிவஞான போத வெண்பா வசனத்தாலும் பெறப்படும். இந்த வசனங்களால் அகரமாகிய நாதமானது உயிரெழுத்துக்களுக்கு முதலாயும் மெய்யெழுத்துக்களுக்கு முதலாயும் இருப்பதுபோல, கடவுளும் உயிர்ப் பொருளுக்கு முதல்வனாயும் உயிரில் பொருள்களுக்கு முதல்வனாயும் இருக்கின்றான் என்பதும், அகர நாதம் இல்லையானால் உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும் ஒலிக்காதனபோல, கடவுள் உயிர்ப்பொருள்களுக்கும் உயிரில் பொருள்களுக்கும் முதல்வனா யில்லாவிடின், அந்த இருவகைப் பொருள்களும் இயங்கா என்பதும் பெறப்படுகின்றன.

4. கடவுள் உயிர்ப் பொருள்களுக்கு முதல்வனா யிருக்கிறதினாலே, அவன் உயிர்ப் பொருள்களுக்கு ஆண்டவன் என்பதும், உயிர்ப்பொருள்கள் கடவுளுக்கு அடிமைப் பொருள்கள் என்பதும் பெறப்படுகின்றன. ஆண்டவன் அடிமைத் தொடர்பு பற்றிய கருத்துக்கள், சென்ற திங்கள் ஆண்டவன் என்னும் சொல்லைப்பற்றிய கட்டுரையில், சுருக்கமாக விளக்கப்பட்டன. ஆண்டான் அடிமைத் தொடர்பு பற்றிய ஒரு கட்டுரை, முன் விரிவாய்ச் செந்தமிழ்ச் செல்வி இரண்டாவது சிலம்பு ௧௨௭-௧௩௧ பக்கங்களிலும், ௧௭௩-௧௭௬ பக்கங்களிலும், ௨௦௮-௨௧௩ பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளன. அதனைப்பற்றிய விரிந்த கருத்துக்களை அப்பக்கங்களிற் காண்க.

5. கடவுள் உயிரில் பொருள்களுக்கு (சடஉலகம்) முதல்வனாயிருத்தலால், கடவுளுக்கு உயிரில் பொருள்கள் உடைமைப் பொருள்கள் ஆகின்றன. மண், நீர், தீ, வளி, வெளி ஆகிய அஞ்சு முதற் பொருள்களும் (பஞ்ச பூதங்களும்) கடவுளாலேயே இயங்குகின்றன. அஞ்சு முதற் பொருள்களும் அவைகள்

லாகிய தத்துவக் கூட்டங்களும் உலகங்களும் நுகர்வுப் பொருள்களும் கடவுளாலே உயிர்களின் பொருட்டுப் படைக்கப் பட்டிருக்கின்றன. உயிர்கள் உலகில் இப்பொருள்களைக் கை யாண்டு நுகர்ந்து சிற்றின்பம் அடைகின்றன.

6. முதல்வன் என்ற சொல்லில், ஆண்டவன் என்ற சொல்விளக்கக் கட்டுரையிற் குறிக்கப்பட்ட ஆளுதற்கருத்துக் களும், இறைவன் சொல்விளக்கக் கட்டுரையிற் குறிக்கப்பட்ட தங்குதற் கருத்துக்களும் அடங்கியுள்ளன. முதல்வன் என்ற சொல்லானது கடவுளுடைய இயக்க மில்லாமல் உயிர்ப்பொருள் கள் வேட்கை அறிவு செயல்களை நிகழ்த்தவாவது, உயிரில் பொருள்கள் அசையவாவது முடியாது என்னும் கருத்தைச் சிறப்பாக உணர்த்துகின்றது. கடவுளுடைய இயக்கம் கூத்து (நடனம்) என்று கூறப்படும். கடவுள் அக்கூத்தை அண் டத்தினிலங்கும் செயலிலும், சிறப்பாகச் சிற்றம்பலத்திலும் (சிதம்பரம்), உயிர்களுடைய நெஞ்சுப் பையிலும் (இருதயத்தி லும்) செய்து வருகின்றான். ஆதலின், கடவுள் உயிர்களுக்கு "வாழ்முதலாகிய பொருள்" ஆகின்றான்.

7. தலைவன் என்ற சொல்லும் ஏறக்குறைய முதல்வன் என்ற சொல்லில் அடங்கியுள்ள கருத்துக்களை உணர்த்துகின் றது. கடவுளுக்கு முதல்வன் என்ற பெயருள்ளது போல் தலைவன் என்ற பெயரும் உண்டு. உலகில் எவ்வகைய மக்க கூட்டமும் அதற்கு ஒரு தலைவனையின்றி நடவாமலிருத்தலை ந கண்கூடாகக் காண்கின்றோம். ஆனால், ஒரு கூட்டத்தார் தலை வனை நாம் கடவுளுக்கு ஒரு புடை உவமையாகத்தான் கொள்ள லாம்; ஆதலின், கடவுள் உலகிற்கு முதல்வனாயிருந்தாலன்றி உல கம் நடவாது என்பது தெளிவு. இக்கருத்தைத் திருநாவுக்கரசு அடிகள் தேவாரத்தில் "தானலா துலகமில்லை சகமலா தடிமை யில்லை" என்று கூறியிருத்தல் காண்க.

8. பிரான் என்ற சொல்லும் பெருமான் என்ற சொல் லும் பெருமான் என்பதன் மரூஉச் சொல்லாகிய பெம்மான் என்ற சொல்லும் ஏறக்குறைய முதல்வன் என்ற சொல்லில்



அடங்கியுள்ள கருத்துக்களை உணர்த்துகின்றன வாதலின், அச் சொற்களெல்லாம் கடவுளுக்குப் பெயர்களாய்த் தமிழ் மொழி யில் வழங்கப் படுகின்றன.

---

# நக்கீரனார்

## தெய்வப் புலமைமாட்சி

[ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள்]

(முன் ௪௭௮-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்புதுமையைக் கண்டு வியந்து அதனை நோக்கி வைகிய நக்கீரனாரைக் கதுமென ஒரு பெரும்பூதந் தோன்றி, உமைமா னிளங்கன்றைக் கவர்ந்த உழுவைபோலக் கவர்ந்துசென்று ஒரு மலை முழைஞ்சினுட் புகுத்துத்தாளிட்டுச் சென்றது. செல்ல, அம்மலை முழைஞ்சினுண் முன்னரேயிருந்த தொள்ளாயிரத்துத் தொண்ணூற் றொன்பதுமக்களும் நக்கீரனாரை நோக்கிச் சொல் லார்-'ஐய! நீ வருதலால் ஆயிரமென்னுந் தொகை நிரம்பியது, இப்பூதம் நீராடச் சென்றது, திரும்பி வந்ததும் நம்மையெல் லாம் ஒருங்கே செகுத்து உண்ணும், நீ வராவிடில் இவ்விடர் நேராதுகாண்' என்று மிகநொந்து கூறினார். இதுகேட்ட நக்கீர னார் அறிவுமாழ்கிச் சிறிதுமிடர்ப்படாது அவர்க்கு நேரும் ஊறத்தை நீக்குதற்கு முருகக்கடவுள் திருவடித் தாமரைகளை வழுத்தியாறெழுத்தினையுமோதுவலென் றுதெளிந்துஅவ்வாறே யோதித் திருமுருகாற்றுப்படை மொழிந்தார். மொழிதலும் அருள் வள்ளலாகிய அறுமுகக் கடவுள் குறுநகை யிலங்கத் தோன்றி, அணுகிய பூதத்தைக் கதையாலடித்து வீழ்த்தி மலை முழையிலுள்ளோரை விடுவித்தார். இதன்பின், நக்கீரனார் முரு கனைத் தொழுது "மறைமுதல்வ! உமை புதல்வ! ஆலவாயமர்ந்த நீலகண்டனைச் செருக்குரை பகர்ந்தவென் னிழுக்க மொழியக் கயிலைகாணுதி யென்றனன் கண்ணுதல், அண்ணலே! இன்னு மதுகண்டிலேன், இங்கென் விழுமந்தீர்த் ததுகாட்டுதியால்." என்றழுது குறையிரப்பச் செவ்வேளிரங்கிக் "கயிலை யென்று வாளா திசைபுணர்த்தோதாது கூறினையாதலினாதலால், தென்க

செய்து அனுகூலர்களாய்ப் பட்டுப் பிரபஞ்சத்தை உன்னத ஸ்திதிக்குக் கொண்டு வருவார்களென்றும் இவ்வித திருஷ்டியுள்ள பெரியோர்கள் சொல்லுகிறார்கள். இவ்வாறு மரணமடைந்த பக்தர்கள் நமது குடும்பங்களில் ஜனிக்க வேண்டுமானால் நாம் அதிக பக்தியோடு ஒழுகி, எல்லோருடைய நன்மைக்காகவும் பாடுபடவேண்டும். நமது பாலர் பாலிகைகளையும் நல்ல ஜனசமூகத்தினிடமே விருத்தி அவர்களிடம் பக்தி, உறுதி, சிரத்தை, பூஜனை, இவைகளை விருத்திப் படுத்த வேண்டும்.

இவ்விதம் மக்கள் வளர்ந்து பக்தர்களாயும், பதிவிரதைகளாயும் ஆவார்கள். அவர்களுடைய கர்ப்பத்தில் இந்த பக்தர்களான மரணமடைந்தவர்கள் ஜனிப்பார்கள். குடும்பங்கள் பரிசுத்தமாகும். தேசம், பிரபஞ்சம், உன்னத ஸ்திதிக்கு வரும். இவ்விதம் குழந்தைகளை வளர்க்கும் தாய் தந்தையாதிகள் வரப்போகும் பிரபுவுக்கு அதிகப் பிரியமுடையவர்களாகி இம்மஹானுடைய திவ்ய தேஜஸை விசேஷமாய் இப்பொழுதினின்றே அடைவார்கள்.

இப்புண்ய காலத்தில் நாம் செய்யவேண்டிய வேலைகள்.

(1) ஒவ்வொருவரும் மேற்கூறிய தர்மங்களைத் தெரிந்து கொண்டு அந்தப்படி நடந்து இதரர்களுக்குத் தெரிவித்து அனுஷ்டிக்கச் செய்யவேண்டும்.

(2) மதங்களைப் பரிசுத்த ஸ்திதிக்குக் கொண்டுவருதல். ஜனங்களுக்குக் கல்வி கற்பித்தல். ஜீவர்களை உன்னத ஸ்திதிக்குக் கொண்டு வருதல். ராஜீய விஷயங்களில் தேச விருத்திக்காகப் பாடுபடல். என்ற இந்நான்கில் எதில் வேலை செய்வதற்கு சக்தியும் அவகாசமுமுள்ளதோ அந்தந்த வேலைகளைச் செய்து கொண்டு, தேசவிருத்திக்குப் பாடுபடவேண்டும்.



யிலையாகிய காளத்தியானுமிந்நோய் தீரும்'' என்று நினைந்து நக்கீரனாரை நோக்கி 'இப்பொய்கையில்மூழ்கினாற் கயிலைப்பொருப்பைக் காண்பை' என, அவரு முருகனை யிறைஞ்சி யேத்தி யவ்வாறே யப்பொய்கையின் மூழ்கிப் பொன்முகரி தீர்த்தத்தினெழுந்தார். எழுதலும் மேனிமேற் பரவிய நோயுந்தீர்ந்து முளையிள ஞாயிறு விளங்குவதென்ன ஒளிவிரியத்தோன்றிப் பாவிற்பொதிந்து கிடந்தநுண்பொருள்பெற்று உவந்தான் போலச் சிவபெருமானை நேரிற்கண்டு கைகள் தலைமேற் கூம்பக் கண்ணீர் முத்தென அரும்ப நாவுரை குழறப் பாவிப்பாவிக் காளத்தியப்பருங் கயிலையப்பரும் வேறென்னுங் கருத்தின்றி யொற்றுமை கொளுத்திக் 'கயிலைபாதிகாளத்திபாதியந்தாதி' கட்டளையிட்டருளினார் நக்கீரனார் என்று விரித்து விளக்கும். இனி,

## திருப்பரங்கிரிப்புராணம்.

தமிழ்க்கடலை யளந்துகொண்ட அறிவின் மாட்சிமைப்பட்ட நக்கீரனார் பரங்குன்றிற் சரவணப்பூந்தடத்தில் நாடோறுங் குடைந்து* பூசனைக்கடன் முறைபெறக்கழிப்பிப் பின் மதுரைமா நகர்செல்வார். இனித்தேவரிற் சிறுநுதலம்மை குறுமருங்கமைந்த மறியமை கையின் மாணிக்க வண்ணரையும், மக்களிற் கயன்மீனுயர்த்திய வழுதியையுமன்றிப் பிறரொருவரையுஞ் செய்யுளிலமைத்துப் பாடுவதில்லையென்னும் உறுதிக்கேளுடையார். இவ்வொழுகலாறுடைய நக்கீரனாரை யொறுத்துத் தான்பாடல் பெறுவதற் கெண்ணிய முருகக்கடவுள் பரங்குன்றிற் சரவணப் பொய்கையிலவர் நீராடப்போதும் பொழுதறிந்து தன்பாலுள்ள அண்டாபரணனை யழைத்து 'நக்கீரனை யொருகுறையேற்றி நமது மலையிற் சிறைப்புகுத்தி மீளுக' என்று பணித்தார். அப்பணிமேற்கொண்டோன் போந்து, முறைப்படி பூசனைப் பெரும்பய மாற்றி யஞ்செழுத் தருவேற்றிக்கொண்டு கரைமருங்கோங்கிய ஆலமர நிழலில் ஒரு பாறை மீதிருக்கும் நக்கீரனாரெதிரில் பொய்கைக்கரையில் ஓராலிலையைக்கிள்ளியிட அது கரையிலொருபாதியும் நீரிலொரு

* நீராடி.

யம் இவைகளால் திவ்ய தேஜஸ் நம்மிடமிருந்து வெளிப்பட்டு ரிஷிகள் தர்ம விருத்திக்காக ஸதா அனுப்பிக் கொண்டிருக்கும் திவ்ய தேஜஸ் பிரவாகத்தில் சேரும். ஏனெனில், ப்ரதி ஜீவனும் ஈசுவராம்சன். ஈசுவர சக்தியானது வித்தில் செடி அடங்கி யிருக்கும்போல், ஜீவனிடம் அடங்கி யிருக்கும். எப்பொழுது ஜீவன் பரோபகாரத்திற்குப் பாடுபடுவானோ, எல்லோருக்கும் ஸத்போதனைகளைச் செய்வானோ, எல்லோருடைய நன்மைக்காகத் தியானித்துக்கொண்டிருப்பானோ, தக்ஷணமே, அவ்வித ஜீவனினின்று, அவனுக்குள் உறங்கிக் கொண்டிருக்கும் ஈசுவர சக்தியாகிற திவ்ய தேஜஸ் வெளிப்பட்டு ரிஷிகள் எல்லோரும் அனுப்பும் திவ்ய தேஜஸ் பிரவாஹத்தோடு சேர்ந்து ஒன்றாகும். இவ்விதம் கலப்பதால் ஏற்படும் தேஜோராசி ஜீவகோடிகளின் க்ஷேமத்திற்கு உபயோகப்படுமாறு வியாபிக்கும்; அதனால் ஜீவர்கள் அதி சீக்கிரத்தில் பரிசுத்தர்களாகி உன்னத ஸ்திதிக்கு வருவார்கள். இவ்விதம் பக்தி, ஸ்ரத்தை முதலியவைகளாலே நாம் கூட ஈசுவரனோடும் ரிஷிகளோடும் சேர்ந்து கொண்டு எல்லோருக்கும் நன்மையைச் செய்யக் கூடியவர்களாவோம். பக்தி, ஸ்ரத்தை விருத்தியாகவாக நம்மிடமிருந்து மென்மேலும் விசேஷமாயுள்ள திவ்ய தேஜஸ் வெளிப்பட்டு ஜீவகோடியை உன்னத ஸ்திதிக்குக் கொண்டு வரும். இவ்வித தர்மத்தை அனுஷ்டிப்பதே யஜ்ஞ தபஸ் என்னப்படும். இவற்றால் நம்மிடமிருந்து வெளிப்படும் திவ்ய தேஜஸ் ஈசுவரனுடைய தேஜோ ராசியில் சேர்வதே ஈசுவரன் இவற்றை ஸ்வீகரித்தல் அல்லது புசித்தல் எனப்படும். இத்தேஜஸை எல்லோருக்கும் வியாபிக்கச் செய்பவன் ஆனபடியால் ஈசுவரன் எல்லோருக்கும் நலத்தைச் செய்பவன். (கீதை அ. 5. சு. 29). இவ்விதம் எல்லோரையும் பரிசுத்த ஸ்திதிக்குக் கொண்டு வந்த மட்டுக் கடங்காத புண்யம் இவ்வித தர்மம் அனுஷ்டிப்பவனுக்கு உண்டாகும். ஆகையால் ஒவ்வொருவரும் இந்த தர்மத்தை மறக்காமல் ஸதா தி



காரணங்களாலும் பரோபகாரத்திற்குப் பாடு பட்டுக்கொண்டு தியானித்துக் கொண்டிருக்க வேண்டும். இவ்வித பக்தனிடம் ரிஷிகளின் தேஜஸ் அதிகமாகி அவன் பூரணனாவான். திரிகரணங்களாலே செய்யும் ஒவ்வொரு நல்ல காரியமும் தர்மப்பிரவாஹத்திற்கு உடன் பட்டு எவ்விதம் தர்ம விருத்தியைச் செய்யுமோ, அவ்விதமே ஒவ்வொரு துஷ்ட சங்கற்பங்களும், கெட்ட சொல்லும், கெட்ட காரியமும் தர்மப் பிரவாஹத்திற்குக் குறுக்கிட்டு தர்மப்பிரவாஹத்தின் வேகத்தைக் கொஞ்சம் குறைக்கும். தர்மம் குறையும். வேகமாய்ச் செல்லும் கங்கா நதிக்கு கல், மரம் முதலியவைகளைக் குறுக்கே போட்டால் ப்ரவாஹ வேகத்தையும் பலத்தையும் சிறிது குறைக்குமல்லவா? அவ்விதமே துஷ்டனுடைய ஒவ்வொரு கெட்ட காரியம் கெட்ட பேச்சு இவைகளாலே அவன் கெடுவது மன்றியில், இவனைப்பார்த்து சிலர் கெடுவார்கள். இவ்விதம் தர்மம் கொஞ்சம் குறையும். கெட்ட சங்கற்பத்தாலே துஷ்டன் ப்ரபஞ்சத்தையெல்லாம் கெடுப்பான். ஒவ்வொரு கெட்ட சங்கற்பத்தாலேயும் ஒரு கெட்ட அலை வெளியேறி, ஜீவகோடியின் மனதுகளில் தாக்கி, மாரி, பிளேக்கைப்போல் வியாபித்து அநேகர்களுக்கு துஷ்டபுத்தியை உண்டாக்கும். தர்மம் இன்னும் விசேஷமாய்க் குறையும்.

இவ்விதம் துஷ்டன் பிரதிபிம்பமும் தர்மப்ரவாகத்திற்குக் குறுக்கே விழுந்து அநேகர்களைக் கெடுத்து மிதமிஞ்சிய பாபத்தை அடைவான். கங்காப்பிரவாஹத்தில் எதிர்த்து நீந்துபவன் ப்ரவாஹத்தின் பலத்தைத் தாங்கமாட்டாமல் பலஹீனனாகிக் கெடும் வண்ணம், ஈசுவராஜ்ஞைக்கும் தர்மப்ரவாஹத்திற்கும் எதிரிடையாக விருப்பவன் மிதமிஞ்சிய கஷ்டங்களை அடைவான். ஆகையால் இந்தத் தர்மத்தைக் கருத்தில் வைத்துப் பக்தி, ஸ்ரத்தை முதலிய நல்ல குணங்களை அப்பியஸித்து ரிஷிகளின் தேஜஸை அடைய வேண்டும். இப்பொழுது காமக்குரோதாதிகள், தேச மத வைஷம்யங்கள் மேல் படிந்து அன்னோர் கீழ் இருப்ப

களை ஹீனர்களாகப் பார்த்தல், இப்சித்தல் முதலான இராக்ஷஸ விருத்திகள் அதிகமாயின. இவைகளைப் போக்கடிப்பதற்கும் தர்ம விருத்திக்கும் தான் தத்வஞான சபை (Theosophical Society) ஏற்படுத்தப் பட்டது.

செடியின் இலைகள் வெவ்வேறாகக் காணப்படினும் செடியின் வேர் ஒன்றே அல்லவா? அவ்விதமே எல்லாப் பெரிய மதங்களும் மஹரிஷிகளின் ஆஜ்ஞைபாலே ஏற்பட்டவை. மதத்தில் கர்மகாண்டத்தில் பேதம் புலப்படினும், இவற்றின் உட்கருத்தைப் போதிக்கும் ஞான காண்டம் ஒன்றாகவே இருக்கின்றது. ஜீவர்கள் கடவுளுடைய பிள்ளைகள். ஆனபடியால் இவர்கள் எல்லோரும் ஸஹோதரர்கள் என்றும், மதத்துவேஷங்களை விட்டு எல்லோரும் நல்ல சகோதர பாவ ஒழுக்கம், பூததயை, இவைகளை அநுஷ்டித்தல் அத்யாவசியமென்றும், தெரிவிப்பதற்காக ரிஷிகள் ஆஜ்ஞைப்படி ரிஷிகளின் சிஷ்யர்கள் தத்வஞான சபையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஸ்திரீ புருஷர்கள் எல்லோரும் இச்சபையில் அங்கத்தினர்களாகச் சேரலாம்.

(1) உண்மையான சகோதர ஒழுக்கத்தை விருத்தி செய்தல். (2) ஸர்வமதங்களையும் ஸகல சித்தாந்தங்களையும் ஒப்பு நோக்கி ஆராய்தல். (3) குப்தமான ஆத்ம தர்மங்களையும் பிரகிருதி தர்மங்களையும் அநுஷ்டானங்களால் கண்டு பிடித்தல் என்ற இந்த மூன்றும் இச்சபையின் நோக்கங்கள்.

இச்சபையார் சென்ற 43* வருடங்களாகப் பாடுபட்டு ஸர்வமதத்திலுமுள்ள குப்தார்த்தங்களைப் பிரகாசித்து மதத் துவேஷங்களையும் அஜ்ஞானத்தையுங் குறைத்து, பக்தி, ஞானம், பூததயை, இவைகளை அபிவிருத்தி செய்து வருகிறார்கள். சில அங்கத்தினர்கள் ராஜயோகாநுஷ்டானபரர்களாகி இவர்களில் சிலர் குருக்களாயுள்ள ரிஷிகளைத் தரிசி

* இவ்வியாசம் 3 வருஷங்களுக்கு முன் எழுதப்பட்டது.



த்து திவ்ய திருஷ்டியையும் கூட அடைந்து, மனோதர்மங்களையும் ஆத்ம தர்மங்களையும் நன்றாய்த் தெரிந்து கொண்டு இதரர்களுக்கு நன்றாய்ப் போதிக்கிறார்கள். அதிசீக்கிரத்தில் மஹரிஷி ஒருவர் பூலோகத்தில் அவதரித்து எல்லா தேசத்தார்களுக்கும் ஸகல மதஸ்தர்களுக்கும் சரியான சகோதர பாவத்தையும், ராஜயோக தர்மங்களையும், உபதேசித்து பக்தி ஞானம் பூததயை இவைகளை விருத்தி செய்து, தர்மஸ்தாபனம் செய்வாரென்பதாகவும், இவர் வருகைக்கு ஒவ்வொரு பக்தனும் பாடுபடவேண்டு மென்பதாகவும் ப்ரபஞ்சத்தைப் பக்குவப் படுத்தவேண்டு மென்பதாகவும், திவ்ய திருஷ்டியுள்ள பெரியோர்கள் சொல்லுகிறார்கள்.

ஆனால் இவருடைய வருகைக்குச் சில பெரிய இடையூறுகள் இருக்கின்றன.

(1) ஜர்மன் தேசத்து ராஜா இதர தேசங்களை ஜயித்து வசத்திலாகச் செய்ய மேற்கொண்டு தயாராக இருத்தல்.

(2) வெள்ளைக்காரர் கறுப்புக்காரர்களை விடத் தாங்களே சிரேஷ்டர்களென்று எண்ணல்.

(3) மேல் படியிலுள்ளவர்கள் இதரர்களை ஹீனர்களாகப் பார்த்தல் முதலிய ஹீன அபிப்பிராயங்களாலே ப்ரபஞ்சத்தில் துஷ்ட தேஜஸ் நிறைந்து அதிகரித்து விட்டது.

இவ்விதமான துஷ்ட புத்திகளையும் கஷ்டங்களையும் ஒழிப்பதற்கும் ஜீவர்களுக்கு தீவிரமான வைராக்கியத்தை உண்டாக்கச்செய்து ஸம பாவத்தையும் பூததயையையும் விருத்தி செய்வதற்காகவும், இதனுடைய பரிசுத்த தேஜஸை அதிகமாகச் செய்து, தர்மப் ப்ரவாகம் நன்றாய் ஓடக்கூடியதாய்ச் செய்து பிரபுவின் வேலை சரியாய் நிறைவேறுவதற்கும் ஐரோப்பா யுத்தம் ஸர்வஜ்ஞர்களாகிய ரிஷிகளாலே உண்டாக்கப்பட்டது.

இந்த கோர யுத்தத்தில் தர்மத்தைக் காப்பாற்றும் கக்ஷியிலிருப்பவர்களான இங்கிலாந்து, பெல்ஜியம், பிரான்சு, இட்டாலி, அமெரிக்கா, முதலாயுள்ளவர்கள் ஒரு பக்ஷம் ஜர்மனி முதலான தேசஸ்தர்கள் ஒரு பக்கம் சேர்ந்து 4½ வருடங்கள் யுத்தத்தை நடத்தினார்கள். நமது தேசத்தார் அனேக லக்ஷம் பேர்கள் நமது பிரபுவின் பக்ஷம் சேர்ந்து ஜெயித்தார்கள். அநேக லக்ஷம் ஜீவர்கள் தனதான்யத்தையும், புத்திர மித்திர களத்திராதிகளையும், பதவிகளையும் எல்லாம் ஒரு நிமிஷத்தில் விட்டு, யுத்தரங்கத்தில் ப்ரவேசித்து லக்ஷக்கணக்காய் மடிந்தார்கள். லக்ஷக்கணக்கான பெயர்கள் அங்கம் பழுதுடையவர்களானார்கள். எல்லா தேசத்திலுமுள்ள கோடிக்கணக்கான ஸ்திரீகள் அவர்களுடைய குடும்பத்தோர்களை யுத்தத்திற்கு அனுப்பி இராப்பகல் பாடுபட்டார்கள். அநேக ஜன்மங்களில் குருசேவையாலும், நிஷ்டையாலும், அடையக்கூடிய வைராக்கியம், தர்மசிந்தனை, ஸர்வத்தையும் தங்கள் சரீரங்களுடன் கூட சண்டைக்கே அர்ப்பணம்செய்தல், இவ்வித தைரியம், பரோபகார புத்தி, சர்வததையும் தர்மத்திற்கே அர்ப்பித்தல், முதலான ஆத்மதர்மங்கள் சொற்பகாலத்தில் இந்த யுத்தமென்ற நிமித்தத்தால் அனேகம் கோடி ஜீவர்களுக்கு, பிழைத்தவர்களுக்கும், இறந்தவர்களுக்கும், ஸர்வஜ்ஞர்களான ரிஷிகள் உண்டாக்கினார்களல்லவா? முடிவில் தர்மம் எந்தப் பக்கமுள்ளதோ அப்பக்கம் ஜயமாகக் கூடியதாய் தயாளுக்களான ரிஷிகள் செய்தார்கள். இந்த யுத்தத்தாலே ஸர்வஸமத்வ புத்தி, ஒவ்வொரு தேசத்தோரும் அவருடைய காரியங்களை அவரே நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமென்ற ஸமபாவம், விருத்தியாயிற்று. நமது தேசத்தில் அதிக ப்ரேமையும் ராஜாங்கத்தாருக்கு ஏற்பட்டது. நமக்கு ஹோம்ரூல் அல்லது ஸ்வராஜ்யம், சுவல்ப காலத்தில் அளிப்பார்கள். யுத்தம் நின்று, சமாதானமும் முடிந்தது. இனிமேல் பிரபஞ்சமெல்லாம் சமாதானமாய் இருக்கும் வண்ணம் செய்வதற்கு எல்லா தேசத்து அரசர்களும் தீர்மானித்திருக்கிறார்கள். பெரியோர்களின் சேவையாலும்



அனுஷ்டானத்தாலும் காமக்குரோதங்களைக் கொன்று ஸமத்வ புத்தியையும், பூததயையும், ஜீவர்கள் தங்களிடம் பலப்படுத்திக் கொள்ளவேண்டும். இவ்விதம் செய்யாவிடின், இவ்வித யுத்தங்கள், பெரிய ஜாட்யங்கள் முதலிய கஷ்டங்களாலே, ரிஷிகள் இந்த ராஜயோக நிஷ்டையை மனுஷ்ய கோடிக்குக் கற்றுக் கொடுக்கிறார்கள். ஆகையால் நாம் பெரியோர்கள் ஸேவை செய்து, ராஜயோகானுஷ்டானத்தைத் தெரிந்து கொண்டு அனுஷ்டானமும் பூததயையும் உடையவர்களாக வேண்டும். ஸதா தர்ம விருத்திக்குப் பாடுபடல் வேண்டும்.

இந்த யுத்தத்தில் இறந்தவர்கள் அடையும் தன்மை யாது? மரணமெனின், ஸ்தூல சரீரத்தை விட்டு சூக்ஷ்ம காரண சரீரங்களாலே புவர்லோகம் பிரவேசிப்பதே. ஸ்தூல சரீரத்தை விடும்பொழுது ஜீவனுக்கு எந்த சங்கற்பம் உளதோ, அதே சங்கற்பத்தோடு புவர்லோகத்தில் பிரவேசிப்பான். இவ்விதம் சண்டையில் கொல்லப்பட்ட பக்தர்கள் அனேகர், பக்தி, தர்ம சிந்தனையாலே புவர்லோகம் பிரவேசிப்பார்கள். இப்படிப் பட்டவர்களிடம் ரிஷிகளும், ரிஷிகளின் சிஷ்யர்களும, சூக்ஷ்ம சரீரத்தோடு வந்து இவர்களை ஆசீர்வதித்து, இவர்களுக்கு போதித்து பக்தி, ஞானம் பூததயைகளை விருத்தி செய்வார்கள். இவர்களால மரணமடைந்தவர்கள் அநேக ஆத்ம தர்மங்களைத் தெரிந்து கொண்டு இன்னும் விசேஷ பரிசுத்தர்களாவார்கள். இவ்விதம இறந்தவர்கள் அவர்களுடைய சங்கற்ப சக்தியாலே பூலோக வாசிகளை நல்லவர்களாகச் செய்யக் கடவார்கள். இவ்விதம் பிரபுவின் வருகைக்கு ஸஹாயர்களாவார்கள். இவ்வித பக்தர்களான மரணமடைந்தவர்கள் அநேகர்களை ரிஷிகள் பூலோகத்தில் அதி சீக்கிரத்தில் ஜனிக்கும் வண்ணம் செய்வார்களென்றும், இவ்விதம் ஜனித்தவர்கள் விசேஷ பக்தி, ஞானம், பூததயையை உடையவர்களாகி பெரிய பதவிக்கு வந்து, வரப்போகும் பிரபுவின் சிப்பந்திகளில் சேர்ந்து, அவர் வேலைக்கு எல்லாவற்றையும் அர்ப்பணம்

# தர்ம அதர்ம ஸ்வரூபம்.

ஈசுவரன் பரம தயாநிதி. தனது அற்புதச் சக்தியால் கல்லைச் செடியாகவும், செடியை ஜந்துவாகவும், ஜந்துவை மனுஷனாகவும் செய்து, மனிதனை குரு புத்திரனாகவும் ரிஷி புத்திரனாகவும் விருத்திக்குக் கொண்டு வந்து கிரமக் கிரமமாய்ப் பூரணனாகச் செய்வார். ஈசுவர ஸ்வரூபங்களான ஸநகஸநந்தந ஸநத்குமாராதி ரிஷிகளும் ஈசுவர சக்தியைத் தாங்கள் பூர்த்தியாக அடைந்து இந்த திவ்ய தேஜஸை ஜீவர்களுக்கு வியாபிக்கச் செய்து, ஜீவர்களைப் பரிசுத்தர்களாகச் செய்து பூரணஸ்திதிக்குக் கொண்டு வருவதற்கு ஸதா பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஜீவர்களிடத்திலுள்ள காமக்குரோதாதிகளையும் வேற்றுமை பாவங்களையும் நசிக்கச் செய்து பக்தி, ஞானம், வைராக்கியம், பூததயை, பரிசுத்தத்வம் முதலியவைகளை விருத்தி செய்கிறார்கள். இவ்விதம் ஜீவர்களை உன்னத ஸ்திதிக்குக் கொண்டு வரும் வேலையே தர்மம். இந்த தர்ம விருத்திக்கு தெய்வீக ஸம்பத்து அவசியம். இதற்கு எதிரிடையாயுள்ள வேலைகள் அதர்மம்; அதாவது காமக்குரோதங்கள், வேற்றுமை பாவங்கள், மதத்வேஷங்கள், ஒரு வகுப்பு அல்லது தேசத்தார் இதரர்களை துவேஷித்தல், கேவலமாகப் பார்த்தல், உபத்திரவித்தல், ஹிம்சித்தல் முதலிய ராக்ஷஸ கிருத்தியங்கள் அதர்மம். இதுவே அசுர ஸம்பத்து. (கீதை அ. 16.)

பிரதி நல்ல சங்கற்பம், இன்சொல், நல்ல வேலை, இவைகள் தர்ம விருத்தியைச் செய்யும். எவ்விதமெனில் கங்கா நதியைச் சுற்றிலும் பொழியும் மழையில் பிரதி துளியும் கங்கையில் சேர்ந்து கங்கா நதியின் ஜலத்தை அதிகமாய் விருத்தி செய்யுமல்லவா? அவ்விதமே நம்முடைய ஒவ்வொரு நல்ல காரியம், இன்சொல், ஸங்க

## இந்தியாவில் மிகப்பெரி

## பழமையுமான வைத்யசாலை

1881-ஷ ஜம்நகரில் ஸ்தாபிக்கப்பட்டது

# ஆதங்கநிக்ரஹ

# ஔஷதாலயம்.

குழந்தைகளுக்கு சகலரோகங்களையும் குணப்படுத்தும்

சஞ்சீவி

பாலமித்ர

300 மாத்திரை

கொண்ட டப்பி

1-க்கு ரூபா 1

வியாதியைப்பற்றி விபரமாய்த் தெரிவிப்போர்க்கு நன்றாய் ஆலோசனை செய்து திருப்தியான விடை கொடுக்கிறோம்.

கடிதங்களுக்கு உடனே பதில் எழுதப்படும்.

இந்த

ஔஷதாலயத்தில் விருத்த வைத்திய பாரங்கதரும், வித்தியா பட்டம்பெற்ற மேதாவிகளும், சாஸ்திர சம்பன்னர்களும் திறமை வாய்ந்த அதிகாரிகளுமாக நூற்றுக்கணக்கான ஜனங்கள் உத்தியோகம் செய்கிறார்கள்.

முதன்மையான

மருந்து சென்ற 35 ஷ காலமாய் உபயோகிப்போருக்கு அற்புத குணத்தைக் கொடுத்து தேகபலத்தையும் மனோவன்மையையும் கொடுத்துப் பெரும்புகழ் படைத்திருக்கிற ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

32 மாத்திரையின் விலை ரூ 1

வைத்திய சாஸ்திரி
மணிசங்கர் கோவிந்தஜீ
ஆதங்க நிக்கிரக
ஔஷதாலயம்
45, மேலக் கோபுர வீதி
மதுரை.

... ல், கபம் ... காசம் இவைகளுக்கு நிரந்தமருந்து

காசாந்தக

மாத்திரைகள் டப்பிக்குவிலை ரூ 1

இதுவரை எங்கள் கேட்லாக்கை பார்த்திராவிடில் உடனே உங்கள் விலாசத்தை எழுதுங்கள் எவ்வித செலவில்லாமல் அம் இனாமாய் அனுப்புகிறோம்

நின்றும், அகத்தே உயிர் இடமாகக் கொண்டு நின்றும், ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டைக் கொண்டருளுவர். லிர என்னும் தாது சித்திரித்தல் எனப் பொருள் படுதலாற் படைத்தற் காத்தல் முதலியவைகளினாலே உலகத்தைச் சித்திரிப்பதாகிய சிவத்தினுடைய பிரபாவமே இலிங்கம் எனப்படும். அவ்விலிங்கத்தினது விளக்கத்துக்கு இடமாகிய வாணம் சைவம் முதலியவைகளும் உபசாரத்தினால் இலிங்கம் எனப்படும்.

இலிங்கம் ஆன்மார்த்த லிங்கம் எனவும் பரார்த்தலிங்கம் எனவும் இரண்டு வகைப்படும். அவைகளுள் ஆன்மார்த்த லிங்கமாவது ஆசாரியரிடத்தே எழுந்தருளப் பண்ணிக்கொண்டு மரண பரியந்தம் தன் பொருட்டுப் பூசிக்கப்படும் இலிங்கமாம். இது இட்டலிங்கம் எனவும் பெயர் பெறும். பரார்த்த லிங்கமாவது பிறர்பொருட்டுச் சர்வ சங்காரகாலமளவும் பூசிக்கப்படும் இலிங்கமாம். அதுவே திருக்கோயிலுள்ளிருக்கும் இலிங்கம். அது சுயம்பு, காணம், தைவிகம், ஆரிடம், மானுடம் என ஐவகைப்படும். சிவலிங்கம் அசைவில்லாத தாதலினாலே தாவரம் எனப்படும்.

சைவ சமயத்தை அடைந்தவர் சிவபெருமானுடைய திருவடியைச் சேர்தற்குரிய மார்க்கம் சரியை, கிரியை யோகம், ஞானம் என நான்குவகைப்படும். அவைகளுள்ளே, சரியையாவது புறத்தொழிலினாலே உருவத்திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு. கிரியையாவது புறத்தொழில் அகத்தொழில் என்னும் இரண்டினாலும் அருவுருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு. யோகமாவது அகத்தொழிலினாலே அருவத்திருமேனியை நோக்கிச்செய்யும் வழிபாடு. ஞானமானது அகத்தொழில் புறத்தொழில் இரண்டு மில்லாமல் அறிவுத்தொழில் மாத்திரத்தினாலே அம்மூன்று திருமேனிக்கும் மேலாய் அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப் பிழம்பாய் நிறைந்து நிற்கின்ற சிவத்தினிடத்தே செய்யும் வழிபாடு. இந்த நான்கு மார்க்கத்தில் ஒழுகுவோர்களே மெய்யடியார்கள். இவ்வடியார் திருமேனி அசைவுடையதாதலாற் சங்கமம் எனப்படும்.

டது. இவ்வாறு சிவானுபூதிப் பெருவாழ்வுடையர்களாகிய திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் என்னுஞ் சமயாசாரியர்கள் நால்வரும் தலந்தோறுஞ் சென்று சிவலிங்கப்பெருமானை வணங்கித் திருப்பதிகஞ் செய்தமையே இதற்குச் சான்றாகும். இது ஞானத்திற் சரியை எனப்படும். அது சதமணிக் கோவையிலே

வெண்பா.

**"வன்றொண்டர் சம்பந்தர் வாகீசர் மற்று மூளோர்**
**பொன்றரிய ஞானம் புகுந்திருக்கச்—சென்று**
**பதிதோறும் பாடிப் பணியுமதென் மாட**
**மதிதோ யருட்டுறையாய் வந்து."**

என்னும் வினாவாலும் "ஞானத்திற் சரியை" என்னும் விடையாலும் அறிக.

சிவலிங்க வழிபாடு நான்குபாதத் தாராலும் செய்யப்படுமாயினும், அது அவரவர் கருத்து வகையால் வேறுபடும்; படவே, அவருக்குச் சிவபெருமான் அருள் செய்யும் முறைமையும் வேறுபடும். அதனைச் சிறிது சொல்வாம். சரியையாளர்கள் பகுத்தறிதலில்லாமற் சிவலிங்க முதலிய திருமேனியே சிவமெனக் கண்டு வழிபடுவர்கள்; அவர்களுக்குச் சிவபெருமான் அங்கே வெளிப்படாது நின்று அருள்செய்வர். கிரியை யாளர்கள் அருவப்பொருளாகிய சிவபெருமான் ஈசானமுதலிய மந்திரங்களினாலே சிவலிங்கமுதலிய திருவுருவுக் கொண்டார் என்று தெளிந்து மந்திரநியாசத்தினால் வழிபடுவர்கள்; யோகிகள் யோகிகளுடைய இருதயமெங்கும் இருக்கும் சிவபிரான் இந்தத் திருமேனியிலும் இருந்து பூசைகொண்டருள்வர் என்று தெளிந்து சாத்திர மந்திரங்களினால் வழிபடுவர்கள்; இவ்விரு திறத்தார்களுக்கும் சிவபெருமான் கடைந்தபோது தோன்றும் அக்கினியும் கறந்தபோது தோன்றும் பாலும்போல அவ்வம் மந்திரங்களினால் அவ்வவர் விரும்பிய வடிவமாய் அவ்வத் திருமேனிகளில் அவ்வப்போது தோன்றி நின்று அருள் செய்வர்., ஞானிகள் இம் முத்திறத்தாரும்போல ஓரிடமாகக் குறியாது அன்பு



சிவபெருமான், எங்கும் வியாபகமாய் நிற்பினும், சிவலிங்க முதலிய திருமேனியும் மெய்யடியார் திருவேடமுமாகிய இவ்விரண்டிடத்து மாத்திரமே தயிரில் நெய்போல விளங்கி நிற்பர். மற்றை யிடங்களிலெல்லாம் பாலில் நெய்போல வெளிப்படாது நிற்பர். ஆதலினாலே, சைவசமயிகளாகிய நாமெல்லாம் பரமபதியாகிய சிவபெருமானை இலிங்கமும் சங்கமுமாகிய இவ்விரண்டிடத்தும் விதிப்படி சிரத்தையோடு வழிபடல் வேண்டும்.

இவ்வழிபாடு மேற்கூறிய சரியை கிரியை யோகம் ஞானம் என்னு நான்கு மார்க்கத்தாலும் செயற்பாலதேயாம். மலநீங்கிய ஞானிகளும், பூர்வ மலவாசனை தாக்காமைப் பொருட்டும், சிவானந்தம் மேன்மேல் வளர்தற் பொருட்டும், சிவலிங்க முதலிய திருமேனியையும், மெய்யடியார் திருவேடத்தையும், வழிபடல் வேண்டும் என்று சிவஞான போதமுதலிய ஞானநூல்களில் உணர்த்தப்பட்டது. நித்திரை செய்வோர்கையிற் பொருள் அவரறியாது தானேநீங்குதல் போலச் சிவஞானிகளுக்குச் சரியையாதிகள் தாமே தவிர்வனவன்றி அவர் அவைகளைத் தவிர்ப்பாரல்லர். சரியையாதிகளைத் தாமே விடுத்தவர் நரகத்து வீழ்வர். இவ்வுண்மை உமாபதி சிவாசாரியர் அருளிச்செய்த சங்கற்ப நிராகரண முதலிய உண்மை நூல்களினாலே துணியப்படும்.

ஒரு பிரபுவினுடைய பணிகளுள்ளே உட்டொழில் செய்வார் புறத்தொழிற்கும் உரியராவர்; புறத்தொழில் செய்வார் உட்டொழிற்கு உரியராகார். அதுபோலவே சிவபெருமானுடைய உண்மைப் பணிகளாகிய ஞான முதலிய நான்கனுள்ளும் மேற்பணி செய்வார் கீழ்ப்பணிக்கும் உரியராவர்; கீழ்ப்பணி செய்வார் மேற்பணிக்கு உரியராகார். ஆதலினால், ஞானி ஞான முதலிய நான்கினுக்கும் உரியன்; யோகி யோக முதலிய மூன்றினுக்கும் உரியன்; சரியாவான் சரியை யொன்றற்கே உரியன் என்பது பெறப்படும். இவ்வாறே சிவ ஞான சித்தியாரினும் செப்பப்பட்டது. இதனாலே திருக்கோயிலுள்ளிருக்கும் சிவலிங்கப் பெருமானை வழிபடல் ஞானி முதலிய நான்கு திறத்தாருக்கும் இன்றியமையாக் கடனேயாம் என்பது துணியப்பட்

திருமந்திரம்

ஆற்றருநோய்மிகு மவனிமழை குன்றும்
போற்றருமன்னரும் போர்வலிகுன்றுவர்
கூற்றுதைத் தான்றிருக் கோயில்க ளானவை
சாற்றிய பூசைக டப்பிடிற் றானே.

முன்னவனார் கோயிற் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாகிவளங் குன்றுங்
கன்னங் களவு மிகுந்திடுங் காசினிக்
கென்னரு ணந்தி யெடுத்துரைத் தானே.

கிலமாயுள்ள ஸ்தலங்களை ஜீர்ணோத்தாரஞ் செய்தற்கும், நித்தியபூசை முதலியவை இல்லாத ஸ்தலங்களிலே நித்தியபூசை முதலியவை நடத்துதற்கும் பெரும்பொருள்வேண்டுமாதலாலும், தனித்தாயினும் சிலர்மாத்திரம் கூடியாயினும் இவைகளை முடித்தல் இல்லாமையாலும், சைவசமயிகளாகிய நம்மவர்களெல்லோரும் ஒற்றுமையுடையவர்களாய் ஒருங்கு கூடல்வேண்டும். அப்படிக் கூடாதவழி இக்கருத்துச் சித்திபெறாது. தமிழர்களாகிய நம்மவர்கள் யாதாயினும் ஒரு கருமத்தை நடத்துதற்கு ஒருங்கு கூடுதல் அரிது. ஒரே வழிக் கூடினும், ஐக்கியத்தோடு நிலைபெற்று எடுத்த கருமத்தை நிறைவேற்றல் மிக அரிது. அவர்கள் ஐக்கியமேயின்றிப் பெரும்பான்மையும் தங்கள் உள்ளத்தில் விளையும் பகையையே பாராட்டிக் கலகம் விளைத்து எடுத்தகருமத்தைக் கைநெகிழ விடுதலே வழக்கம். இதுபற்றியே நம்மவர்கள் லௌகிகநெறி வைதிகநெறியென்னும் இரண்டிலும் மேன்மை யடையாது, அன்னிய தேசத்தார்களும் அன்னிய பாஷையார்களும் அன்னிய சமயத்தார்களுமாய் உள்ளவர்களாலே அவமதிக்கப்பட்டுத் தலைகவிழ்கின்றார்கள். சகோதரர்கள் பலர் தங்கள் பிதாவினுடைய வீடு முதலியவற்றிற்கு இடையூறு நிகழும்பொழுது தங்களுள்ளே எத்துணைப் பகை இருப்பினும் அதனைச் சிறிதும் பாராட்டாது ஒற்றுமையுடையவர்களாய்த் திரண்டு அவ்விடையூற்றை நீக்கி அப்பிதாவுக்கு இனியர்களாய் ஒழுகுவது இயற்கை. அதுபோலவே சைவசமயிகளாகிய நாமெல்லாம் நமது பரம பிதாவாகிய சிவபெருமானுடைய திருக்கோயில் முதலியவற்றிற்கு இடையூறு நிகழும்பொழுது நம்முன்னே எத்துணைப்



பகை இருப்பினும் அதனைச் சிறிதும் பாராட்டாது ஒற்றுமையுடையவர்களாய்த்திரண்டு அவ்விடையூற்றை நீக்கி அச்சிவபிரானுக்கு இனியர்களாய் ஒழுகுவதன்றோ அழகு. இப்படிச்செய்பவர்களன்றோ சைவசமயிகளென்னும் பெயருக்கும் அதனாற் பெறற்பாலதாகிய பெரும் பயனுக்கும் பாத்திரராவார்கள். இவ்வியல்பில்லாதவர்கள் அங்ஙனம் ஆவார்களா! ஆகார்கள் ஆகார்கள்.

நம்மவர்களெல்லாரும் பொறாமை பகை முதலியவைகளின்றி ஐக்கிய முடையவர்களாய்க் கூடும் பொருட்டும், தங்கள் தங்களால் இயன்றமட்டும் வாக்காலும் காயத்தாலும் பொருளாலும் சகாயம் செய்து மேற்சுட்டிப்போந்த உத்தமோத்தம சிவ புண்ணியங்களை விதிப்படி சிரத்தையோடு நிறைவேற்றிப்பெரும் புகழையும் பெரும் புண்ணியத்தையும் அடையும்பொருட்டும், திருவருள்சுரக்கும்படி பரமகாருண்ய சமுத்திரமாகிய சிவபெருமானுடைய திருவடிகளைப் பிரார்த்திக்கின்றோம்.''

## கம்பன் கவிச்சுவை யமைப்பு.

[தோரமங்கலம் A. வரதநஞ்சைய பிள்ளை.]

(௩கூக-ம் பக்கத்தொடர்ச்சி)

உலக இயற்கை செல்லும் வழியே புலவர் திலகங்களின் உள்ளமும் தொடர்ந்து செல்வதல்லது, தம் உள்ளங் கருதியவாறெல்லாம் உலகஇயற்கையைத் திரித்தீர்க்க அம்மூதறிஞர் முற்படார். தன்மை நவிற்சியணி யொன்றனையே பண்டைக்காலச் சங்கநூற்களிற் பல விடங்களிலும் காண்கின்றோம். கற்றுப் பயன்றுய்ப்போருக்கு இயற்கையை ஊடுருவிச் செல்லும் கருத்துக்களிற் சுவைபெருகுதல் போல வேறுவிடயங்களிற் சுவைசாலப்பெருகுதலின்று. நம் கம்ப நாடர் அத்தன்மை நவிற்சியை இயற்கை ஒழுக்கங்களிற் கண்டு கருத்தில் அமைத்து உரிய இடங்களிற் பொதிந்து வைத்த மாட்சி நம்மனோர் கண்டு களித்துப் போற்றிப் பாராட்டத் தகுவதேயாம். அவற்றிலும் சில காட்டுவோம்.

தாமுறு காமத் தன்மை தாங்களே யுரைப்ப தென்ப
தாமெனலாவதன்றா லருங்குல மகளிர்க் கம்மா !
வேமுறு முயிர்க்குநோகேன் என்செய்கேன் யாருமில்லேன்
காமனென் றொருவன் செய்யும் வன்மையைக் காத்தியென்
[றாள்.

எங்குங் காணற்கரிய கட்டழகை முற்றும் பெற்ற காளையே! அரிய உயர்குலத்தில் பிறந்த என்போன்ற உத்தம கன்னிகைகட்குத் தாங்கள் அடைந்த காமத்தின் இயற்கை வேட்கையைத் தமது நாவினாலேயே தாம் விரும்பிய புமான்களிடத்தில் சொல்லிக்கொள்வதென்பது இயல்பேயாம் என்று சொல்வது ஆவதொரு காரியமாயிருப்பதல்ல, நீ இதனைக் கேட்கக்கடவாய் ! உலகவாழ்க்கை உயிரை இன்றியமையாதன்றோ அவ்வரும்பெறலுயிர் அழிந்துபோகத்தக்க ஓர் இடர்ப்பாடுநேரின் அப்போது மானத்தையோ நாணத்தையோ பார்த்தாலாகுமா ? யான் யாது செய்வேன் ? என் கருத்தைத் தூதின்மூலம் தெரிவிக்கலாமென்றுகருதினும் எனக்கேற்றவர்களாய்க் கருத்தொருமித்த தூதிகள் யாரும் இல்லேனாயினேன். ஆகவே என் குறையை யானே கூறுவதில் குற்றமில்லை. "அதாவது மன்மதனாகிய ஓர் துஷ்டன் என்பாற் செய்யும் ஆண்மை குன்றும்படி அவனை வென்று அத் துன்பத்தினின்றும் மீட்டு என்னைக் காப்பாற்றுதல் வேண்டும். இஃதே யான் நின்னை நாடிவந்த காரியம்," என்று கூறினாள்.

இங்கே, "தாங்களே உரைப்பது தகாது!" என்று ஒரு சிறு சொல்லைக்கொண்டு முற்றுவிக்கவேண்டிய வாக்கியத்தை "உரைப்பதென்பது ஆம் எனல் ஆவதன்று" என மிக நீட்டி விட்டிருக்கின்றார். தலையைச் சுற்றி வளைத்துக் கையால் மூக்கைத் தொடுவதுபோல் இவ்வாறு சுழன்று பேசுவானேன் எனில் அச்சொல்லைக் கூறும்போது அவளது மனம் ஒருபாற்படாது நாணம், அச்சம், பெருமை, இழிவு நோக்கும் கருத்து, முதலியவற்றால் நசுக்குண்டு உரை பல பிதற்ற நேர்ந்ததென்பதை விளக்கவே கவி இவ்வாறு வளர்த்திக் கூறிக் காட்டுகின்றார்.

இஃதேபோல, சுந்தரகாண்டத்திலும், அநுமன் சீதையின்



ஒருவர், ஒரு கருத்தைத் தம் வாயாரக் கூறுவதற்கு, அச்சத்தாலோ நாணத்தாலோ, அநுசிதம் என்ற கருத்தாலோ தடுக்கப்பட்டுத் துணியாத நிலைமையில், அதனை வாய்திறந்து தம் கருத்துக்கு விரோதமாய்ச் சொல்லக்கூடாதவர்களிடத்தில் சொல்லியே ஆகவேண்டும் என்று ஏற்பட்ட நிர்பந்தத்தால் என்ன செய்வது எப்படித்தான் சொல்வது ? என்றொருபால் மனமொப்பாமையும், எப்படியும் சொல்லித்தான் தீரவேண்டும் இல்லாவிடில் அது நம் எண்ணம் முற்றுறாமலும், அபவாதமும், அவமதிப்பும் தருவதாகவும் முடியுமே என்று ஒருபால் துணிவும் கொண்டு திகைப்புற்றுப் பேசத் தொடங்கும்போது எப்படிப் பேசுவார்களோ அதனை நமது கவிச்சக்கிரவர்த்தி முக்கியமான இரண்டிடத்தில் காட்டியிருக்கின்றார்.

முதலாவது சூர்ப்பநகி பஞ்சவடியில் போந்திருந்த இராமபிரானது பேரழகில் ஈடுபட்டு அவனது தோட்களைப் புல்லிக்கொள்ளத் தூண்டிய காதல் மீதூர, அழகிய கன்னியாக வேடம் பூண்டு அவனருகிற் சென்று நிற்ப, ஐயன் அம்மே ! நீர் யாவர்? எவ்வூரிலுள்ளீர் ? நும் திருப்பெயர் யாது ? என்றெல்லாம் வினவ அவற்றிற்குத் திறமையாக மறுமொழி கூறினளாகப் பின்னும் அவன் நீர் இங்கு என்னை நாடிவந்த கருமம் யாது ? அஃதியைவதொன்றாயின் முடித்துதவுகின்றேனென்று கேட்க அப்போது, இவள், "ஒரு பெண்ணாகிய தானே தன்வாயாரஉம்மைக் கூடி இன்பம் நுகர வேட்கையுற்றேன்" என்று தன் கருத்தை உரைப்பது வெட்கக்கேடாகவும், தன் பெருமையை அறத் தாழ்த்தும் இழிதகமையாகவும் இருத்தலால்கூறவும்முடியாமல் அவ்வாறு கூறாதுவிடின் தன் உட்கோள் அவன் அறிதற்கும் அறிந்து உடன்படுதற்கும், உடன்பட்டுத் தன்னைக் கலந்து இன்பமளிப்பதற்கும் இயலாதுபோக நேருமே என்ற கருத்தால் கூறாமலிருக்கவும் முடியாமல் திகைப்புற்று இறுதியில் தன் வேட்கையின் வழியே செல்லுந் துணிவினால் உரைக்கத்தொடங்குகின்றாள். இவ்விடத்தில் அவள் கூற்றாகக் கவி கூறும் இயற்றையை நோக்குவோம்.

ணர்கள் கைப்பிணி தீர்ந்தது. நெருங்க முடியாது தள்ளி நின்றார்கள். திகைத்தார்கள். செயலற்று நின்றார்கள்.

**மன்னவர்** :—ஐயகோ,

இடப்பால், தீ, தாங்க முடியவில்லையே! வலப்பால் இன்பமுற்றேன். இடப்பால் துன்புறுகின்றேன். வீடும், நிரயமும் ஒருங்கே துய்க்கின்றேன். பாலும் நஞ்சும் ஓரிடத்தே கண்டேன்.

தீத்தொழில் அருகரே,
நீவிர் தோற்றீர். என்னைவிட்டுத் தூர ஓடுங்கள்.
(வள்ளலாரைப் பரிந்து நோக்கி)
எனை உய்யக் கொண்ட வள்ளலே!

இந்த, இடப்பால் வெப்பும், அடைய நீங்க, அருள் செய வேண்டும்,

**திருஞானசம்பந்தர்** :—“மன்னே! அஞ்சல் ஒழிக. இறையருளால் இதோ தீர்க்கின்றேன்.

(என்று மறுபுடையும் திருநீறு பூசித்தீர்த்தல்).

**மங்கையர்க்கரசியார்** :—(மன்னர் நோய் நீங்கி எழுந்ததைக் கண்டதும் பிள்ளையார் கழலடி பணிந்து).

எங்கள் உயிர் ஈந்த எந்தாய்,

இன்றே பிறந்த பேறு பெற்றனம். மேன்மையும் உற்றோம்.

**குலச்சிறையார்** :—(அடிவணங்கி)

சிவனார் மகனாரே,

எங்கள் மன்னரும் உய்ந்தனர். எங்கள் நாடும் உய்ந்தது.
நாங்களும் பெறலரும் இன்பம் எய்தினோம்.

**மன்னவர்** :—(கைதலை குவித்து, நின்று வணங்கி)

எம்பெருமானே,

யானும் உய்ந்தேன்?



அளப்பரிய துன்பத்தையும் அவள் பிரிவால் இராமன் எய்தும் கரையில்லாத் துயரத்தையும் கண்டு மிகவும் பொறாது ஓர் துணிவுகொண்டான். அஃது, இச்சீதையைத் தன் தோளில் ஏற்றிக் கொண்டுபோய் இமைப்பொழுதில் இராமன்பாற் சேர்த்துவிடுவது என்பது. இக் கருத்தை மிக விநயமாகவும், பரிவுடனும் பிராட்டியிடத்தில் தெரிவிக்கிறான். அதனைச் செவியுற்ற சானகி, தன் சார்பில் அத்துணை உருக்கமான அன்புகூர்ந்து அவனது ஆற்றாமையை நோக்கமகிழ்ந்தும், அவன் கூறுவது தன் பெண்தன்மைக்கு முற்றிலும் தகாதெனக் கடிந்தும், அவனது மொழிகேட்டு மாறு கூறமுடியாது தயங்குவாளாயினள். நெடிய கடலைத்தாண்டித தான் உயிர் துறக்கவிருந்த சமயத்தில் முற்பட்டுத் தடுத்து, ஐயன் கைக்கணையாழியை நீட்டி மகிழ்வூட்டித் தனக்கு அன்னையும் அத்தனும் அருளின் வாழ்வுமாக முன்னின்று, ஆவன கருதிக்கூறும் அவனது கள்ளமற்ற கருணைபொங்கிய உள்ளத்தே தோன்றிய கருத்தை மறுத்தலும் அறமன்று, அவன் தான் கூறியது குற்றமென்றுணர்த்தப்பெற்றால் மனம் நொந்து புண்ணுறுவன், அல்லது அவனுரைவழி உடன்பட்டாலும் ஒரு பெண்ணாகிய தன்னை அவன் ஆறிய ஐம்பொறி அறிஞனாயினும் ஆண் உருவினனாதலின் தீண்டப் பெறுதல் சால்பன்று. பழிப்புமுண்டாம். இதற்கென் செய்வதென்று பல்கால் கூர்ந்து நினைத்து இறுதியில் ஒரு தலை துணிந்து கூறுகின்றாள்.

**அரியதன்று நின் னாற்றலுக் கேற்றதே**
**தெரிய வெண்ணினை செய்வதும் செய்தியால்**
**உரியதன்றென ஓர்கின்ற துண்டதென்**
**பெரிய பேதமைச் சின்மதிப் பெண்மையால்.**

ஆஞ்சனேய! நீ, கூறும் இச்செயல் நினக் கரியதானதுமன்று, மிகவும் எளியதே; உன் (கடல்கடந்த) பேராற்றலுக்கு ஏற்றதேயாகும். இங்கும் அங்கும் உற்ற பெருந்துன்பங்களை நேரிற்கண்டு எங்கள் துன்பம் தீர்க்கும்வழி யீதாமென நன்கு ஆலோசித்தே துணிந்தனைபோலும், சொல்லுதலெளிது செய்தலரிது என்னும் உலக இயற்கை நாணச்சொன்னவாறே செய்தும்

நான் "பாலரு வாயர்" என்று அஞ்சவேண்டாம். இவ்வமணர்கள் ஒரு நிலையில்லர்தவர்கள். இவர்களுக்கு யான் எளியேனல்லேன்.

திருச்சிற்றம்பலம்.

"மானினேர் விழிமாதராய் வழுதிக்குமா பெருந் தேவி கேள்
பானல்வா யொருபாலன் ஈங்கிவ னென்றுநீ பரிவெய்திடேல்
ஆனைமாமலை ஆதியாய இடங்களிற் பல அல்லல் சேர்
ஈனர்கட் கெளியே னலேன் றிருவால வாயர னிற்கவே."

திருச்சிற்றம்பலம்.

**மன்னவர்** :—(மகிழ்ந்தான்) இருவீரும் என்னைத் தீருங்கள். பின் மற்றது.

**அமணர்கள்** :—அரசே, நாங்கள் உமது இடப்பாகமுற்ற நோயைத் தீர்ப்போம். நாங்களே முதலில் போக்குகின்றோம். (என்று தங்கள் கைப்பீலிகளால் "அருகனே காவாய்" என்று கூறித் தடவினர்.—நோய் மிகுந்தது.)

**மன்னவர்** :—(நோய் தாங்கமுடியாது, பிள்ளையாரைப் பார்த்தார்).

**திருஞானசம்பந்தர்** :—(குறிப்பறிந்து திருநீறு கையிற்கொண்டு திருப்பாசுரம் அருளி வலப்பால் பூசினார்).

திருச்சிற்றம்பலம்.

"மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான் திருநீறே".

திருச்சிற்றம்பலம்.

பாசுரம் கூறி நீறு பூசவும், வெப்பு நீங்கி, இடப்பாலுற்றது. மன்னன் பொறுக்க முடியாது துன்பெய்தினன். அம



துணியான். எனவே, பெருஞ்சுட்டு வேண்டின் குடியை யொழித்துத் தெளிவைக் கொள்க, உழைப்பைக் கொள்க, கழப்பைத் தள்ளுக, மடியைத் தள்ளுக, சுறுசுறுப்பை மேற்கொள்க.

---

# திருஞான சம்பந்தர்-செந்தமிழ் நாடகம்.

[திரு. S. முத்துக்குமாரசாமியா பிள்ளையவர்கள்]

(௬௨௭-ம் பக்கத்தொடர்ச்சி)

## ஆறுவது அங்கம்—நான்காம் காட்சி.

நமது பிள்ளையார் வாயைத் திறந்தாரோ இல்லையோ, உடனே, இருந்த அமணர்கள் யாவரும், எழுந்து, வள்ளலாரைச் சூழ்ந்து கொண்டு ஒரே கூக்குரலாகக் கோபாவேசத்துடன் பிள்ளையாரை நோக்கி—

"என் சொன்னீர்— என் சொன்னீர்"

**மங்கையர்க்கரசி** :—(இவர்கள் நிலையினைக் கண்டு உள் நடுங்கி மன்னரை வணங்கி), என் உயிர் இறைவ,

இப்பிள்ளையார் எளியர், சிறிய வடிவினர். மற்றமணரோ, எண்ணிலார், உமது நோயை வள்ளலார் தீர நல்கும். பின், இவ்வமணர், வல்லராயின் வாது செய்யட்டும். முதலில், நாம் துன்பம் நீங்கின பின்னன்றோ வாது போடவேண்டும்.

**மன்னவர்** :—என்னுயிர்க் காதலி, (கையமைத்து) வருந்தற்க. (என்று கூறிவிட்டுப் பின் அருகரை நோக்கி)

அருகரே ;
வாதென் கொல்? நீரும், சிவனன்பராம் இவரும், நீங்கள் தேறிய தெய்வத் தன்மை என்னிடம் காட்டுங்கள்.

**திருஞானசம்பந்தர்** :—(அஞ்சிய அம்மையாரை நோக்கி).
நற்றவத் தேவியாரே,

யைக் கூறும்இரண்டாவது சூத்திரத்தில் முதல்வனது இலக்கஎ
இயலிலே கூறத்தக்க முதல்வனுடைய இலக்கணத்தைக் கூறுத
நுதலிய பொருட் புறம்பு (irrelavant to the subject take
up) ஆகாதோ என்றால் ஆகாது. காரணம் கூறுதும், கட்டுக
உயிரில்லாதவைகள் அவைகளில் எதுவும் முதல்வனால், இயக்க
பட்டாலன்றித் தனித்தியங்காது. இரண்டாவது சூத்திரத்தி
ஆசிரியர் கட்டுகளது உண்மையை (பாச உண்மையை)க்கூ
எடுத்துக்கொண்டாலும் "அவைகளை முதல்வன் எவ்வாறு இயக்
உயிர்களுக்குப் பயனுண்டாகும்படியான தொழிலைச் செய்கி
றான் என்று கூறினால் அல்லாமல் கட்டுகளது உண்மை அறிய
படமாட்டாது. ஒருவனிடத்தில் யாதாமொரு பொருளிருந்த
லும் அந்தப் பொருளை அவன் தனக்கும் பிறர்க்கும் பயன்ப
மாறு வழங்கப்படுதலினால் அன்றோ அவனிடத்து அப்பொரு
ளது உண்மை தெரியப்படும். படைப்பு முறைமை கூறுங்கா
கூறப்படும் மாயையானது முதல்வனுடைய உடைமையாயு
மறைப்பு அருள்வலி (திரோதானசத்தி) அவனுடைய பண்ப
யும் அமைந்து அவைகளைக் கூறுதலானது அவனுடைய பொரு
இலக்கணத்தின்பால் இடை நிகழ்ச்சியாக (incidentally)
படுகின்றதே அன்றி ஆசிரியர் அவ்விலக்கணத்தை மேலீடா
வைத்து இங்கே கூறவில்லை.

23. இரண்டாவது சூத்திரத்தையும் அதன் தொகைப
பொருளையும் நூலிலே ஓதி அறிந்துகொள்க.

24. இரண்டாவது சூத்திரம் நான்கு அதிகரணங்களை
உடையது. அவற்றுள் முதலாவது அதிகரணத்தை இனி விளக்
கப் புகுவோம்.

---

## பிழைதிருத்தம்.

### சிவஞான போதக் கருத்து.

சிலம்பு அ. பரல் எ.

இரண்டாவது.

| | | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| பாரா ௧. | வரி ௨௰ | பொருந்து முண்மை | பொருந்து முறைமை |
| பாரா ௨. | வரி ௰ | காரணமுன் வழி | காரணமுன் வழி |
| பாரா ௧௧. | வரி ௧. | (educationalist) | (educationist |



# தெளிவுடைமையும் மடியின்மையும்

[காழி. சிவ. கண்ணுசாமி, B. A.]

செல்வமே சிறந்த படைக்கலம் என்பது வழக்காறு. இஃது ஒருபுடை ஏற்றுக் கொள்ளற்பாலதே. ஆயினும் அறிவும் அத்தகைத்தே என்பதையும் ஏற்றுக்கோடல் வேண்டும். எனினும் இவை இரண்டினுாங்கும் மதுவருந்தாத் தெளிவுடைமையும், பேருழைப்பும், மடியின்மையுமே ஒருவற்கு உண்மை வலிவளிக்கும் பெற்றிய. என்னை? இம்மூன்று மற்ற அறிவொன்றுமே சாலச்சிறவாது ஒழியுமாகலின். செல்வத்தால் ஒருவன் எய்தும் வலிமை உள்ளீடற்ற விலங்கின் ஆற்றலை யொத்ததேயாகும். செல்வத்தாற் பெறுவது துணைவலியும் படைவலியும், இற்றைநாட் செய்தித்தாள்வலியும் மற்றுமிவை போன்றவையுமேயாம். ஆனால், தெளிவுடைமை, உழைப்பு, மடியின்மை ஆகிய இச்சீரிய பண்புகள் தீர்ந்த அறிவேயன்றி மிதமான அறிவுடன்கூடி வினைப்படுங் காலத்தும் ஒருவற்குப் பெருஞ் சுட்டளிக்க வல்லனவாகின்றன. மேலும் அப்பண்புகளால் ஒருவன் எய்துமாற்றல் கண்கூடாகச் சிறக்கக் காணப்படுவதொன்றும். குடிகாரனும், மடிகாரனும், இடம்விட்டு இடம் நகர என் செய்வேன் என்றேங்கும் பொதியனையானும், தெளிவும் சுறுசுறுப்பும் உடையோர் முன் வெள்கி மாழ்கின்றனர். இஃதொரு புறமாக, உழைப்பினால் வரும் உறுதியைக் கைமேற் காட்டவல்ல திறல் வாய்ந்தவர்களையே கருமமேற் கொண்டார் தெரிந்து கொள்கின்றனர். தன்னலங் கருதிய வொருவனுக்கு உயர்வு தாழ்வு என்பது இல்லை. எடுத்த கருமத்தை எத்துறை முயன்றால் முடிக்கலாம் என்று சூழ்வோரை அவன் நாடுவதில்லை; எத்துறை முயன்றேனும் முழக்கம் ஆற்றல் வாய்ந்த வரையே நாடுகின்றான்.

இனி, மடிமிகுந்தும், குடிமிகுந்தும் உள்ளார் பலர் அறிவாற்றலிற் சிறந்து விளங்குவதைக் காண்கின்றோம். எனினும் அவ்வாறு அறிவாற்றல் வாய்ந்திருப்பது கருதி அவர்களை ஒரு கருமமுளுற்ற தெளிந்த அறிவுடைய எவனும் துணைகொளச்

உயிரை உலகபோகத்தில் அமிழ்த்தி உயிருக்குப் பக்குவஞ் சிறிது சிறிதாக முதிரும்படி செய்கின்றான். உயிருக்குத் தடையின்றி பக்குவ முதிர்ச்சி உண்டாதற்கு இன்னவை செய்யலாம் இன்னவை செய்யக்கூடாது என்ற அறமானது நோயாளிக்குப் பத்தியம் போலுள்ளது. உயிர் போகத்தில் அமிழ்ந்து வினை செய்தால் ஒரு உலகமும் உடலும் நிலையாதிருத்தல் அதற்குத் தோன்றாதிருத்தல் வேண்டும். உயிருக்குப் போகத்தில் அழுந்துதல் (involution) இல்லாது அதனுள்ளே மறைந்துள்ள வலிகள் வெளிப்படுதல் (evolution) செய்யா. (Releasing of souls energies from within) இவ்வாறு ஆணவ மலத்தின் வழி நின்று உயிர் உலக போகத்தில் அழுந்திப் பக்குவம் அடைவதற்குச் செய்யும் மறைப்பானது மறைப்புஅருள்வலி (திரோதானசத்தி) எனக் கூறப்படும். முதல்வனது அருளை (அநுக்கிரகத்தை) நேரே பெறுதற்குத் தகுந்த பக்குவம் உண்டாகும்வரை உயிருக்குமயக்கமாகிய திரிபு உணர்வைக் கொடுத்து உயிரைக் கட்டுறுத்தலால் மறைப்பு அருள் வலியும் (திரோதான சத்தியும்) ஐந்து மலக் கட்டுகளுள் ஒன்றாக வைத்துக் கூறப்படுகின்றது. விரிப்பிற் பெருகும்.

19. குயவனுக்குத் தண்ட சக்கரம் துணைக் காரணமாய் உதவுதல்போல முதல்வனுக்கு மேலேகூறிய மறைப்பு அருள்வலி (திரோதானசத்தி) துணைக்காரணமாகின்றது. முதல்வன் உயிர்களுக்கு உடல் உட்கருவி நிலம் நுகர் பொருள்களை (தனுகரண புவனபோகங்களை) க்கொடுத்தலாகியபடைப்புத்தொழிலை அவைகளுடைய நல்வினை தீவினைகளுக்குத் தக்கவாறு செய்தலினால் வினை மலமும் அந்தமறைப்பு அருள்வலி (திரோதானசத்தி)யின் வழி அவனுக்குத் துணைக்காரணமாகின்றது. நல்வினை தீவினைகள் ஒரு அரசனது ஆட்சிக்கீழ் வாழும் குடிகளுடைய நற்செயல் தீச்செயல்கள் போலும்! மறைப்பு அருள்வலி (திரோதானசத்தி) அந்த அரசனுடைய ஆணைபோலும்.

20. மண்ணிலிருந்து மட்குடம் செய்யப் படுதல் போல மாயையிலிருந்து உயிர்களுக்கு உடல், உட்கருவி, நிலம் நுகர்



பொருள்கள் (தனுகரணபுவன போகங்கள்) முதல்வனால்படைத்துக் கொடுக்கப்படுகின்றன. ஆதலின் மாயை முதற்காரணமாகின்றது. மாயையானது வினைசெய்தற்கும் வினைப்பயன் தங்குதற்கும் பற்றுக் கோடாயுள்ளது. மாயை மலமும் வினைமலமும் ஆணவமலம் போல அநாதியாயுள்ளன என்றாலும் அவைகள் உயிர்கள் தனி நிலை (கேவல நிலை)யிலிருந்து உடல் நிலை (சகல நிலை)யை அடையும்பொழுது முதல்வனால் கூட்டப்பட்டு வந்து சேர்ந்தன ஆதலால் அவைகள் இடைவந்த மலங்கள் (ஆகந்துக மலங்கள்) என்று கூறப்படும். மாயை வினை மலங்களிரண்டும் இவ்வாறு உயிரை இடையிலே வந்து கூடின காலமுதல் அது தூய்மை நிலை (சுத்த நிலை) அடையும் வரை அதனை விட்டு நீங்காமல் ஆற்றுப்பெருக்கில் முன்னே வந்த நீரோடிப் போகப் பின்னேயும் நீர் ஒழியாமல் வந்துகொண்டிருத்தல்போலத் தொடர்ந்து வருதலால் (பிரவாக நாதியாயுள்ளன) என்று கூறப்படும். மாயா காரியங்களாகிய உடல், உட்கருவி, நிலம் நுகர் பொருள்கள் (தனுகரணபுவன போகங்கள்) ஆணவ மல இருளிற் கிடந்த உயிருக்கு அந்த இருளை ஒருபுடை (ஏகதேசமாய்) நீக்க விளக்குப் போல உதவுவன. அப்படி யிருந்தாலும் எங்கும் நிறைந்துள்ள ஆணவமலமானது அவைகளினூடும் நிறைந்து நிற்றலால் மாயையானது சுட்டி அறிதலாகிய திரிபு அறிவையும் உயிருக்குப்பாய்க்கின்றது. ஆதலின் மாயையும் ஒரு மலமாக வைத்துக் கூறப்படுகின்றது.

21. மேலே கூறியவாறு நிமித்த காரணனாகிய முதல்வன் செய்கின்ற புதிய படைப்பு முறைமையில் (புனருற்பவத்தில்) ஆணவ மலத்தின் வழி நின்று உதவுகின்ற முதல்வனதுமறைப்பு அருள்வலியும் (திரோதான சத்தியும்) அதன் வழித்தாய் உயிர்களுடைய இருவினைகளும் அவனுக்குத் துணைக் காரணங்களாகவும், உடல், உட்கருவி, நிலம் நுகர்பொருள்கள் (தனுகரணபுவன போகங்கள்) நான்கையும் படைத்தற்கு மாயை அவனுக்கு முதற்காரணமாகவும் அமைந்து ஒன்றுக்கொன்று தொடர்புபட்டு மும்மலங்களும் வந்து பொருந்துதலை அறிந்துகொள்க.

22. இனி இவ்வாறு கட்டுகளது உண்மை (பாச உண்மை)

# சிவஞான போதக்கருத்து

## இரண்டாவது சூத்திரம்

[திரு. M. V. நெல்லையப்ப பிள்ளையவர்கள் B.A.,]

(௨௩௫-ம் பக்கத் தொடர்ச்சி)

15. மேலே சொல்லிய வண்ணம் ஆசிரியர் முதலாவது சூத்திரத்தில் உலகிற்கு நிமித்த காரணங் கூறுமாற்றால் முதல்வனது உண்மை (God's Existence) கூறி, இரண்டாவது சூத்திரத்தில் முதற்காரண துணைக்காரணங்கள் கூறுமாற்றால் கட்டுகளது உண்மை (பாச உண்மை) கூறுகின்றார். ஆசிரியர் முதலாவது சூத்திரத்தில் அழித்தற் கடவுளிடம் ஒடுங்கின உலகமானது அவனிடமிருந்து ஒடுங்கியவாறே மீளத்தோன்றும் என்று கூறி, இரண்டாவது சூத்திரத்தில் அந்த உலகத்தை முதல்வன் மீளப்படைக்கும் முறைமையை (புனருற்பவத்தை)க் கூறுகின்றார்.

16. கட்டுகள் (பாசங்கள், ஐந்து ஆகும். அவை:—ஆணவம், மாயை, வினை, மாயேயம், மறைப்புஅருள்வலி (=திரோதான சத்தி) ஆகும். சுருக்கிக்கூறில் ஆணவம், வினை, மாயை எனக் கட்டுகள் மூன்றாகும். மாயேயம் மாயையிலிருந்து உண்டாகியதால் மாயையில் அடங்கும். மறைப்புஅருள்வலி (=திரோதான சத்தி)யானது ஆணவமலத்தின் வழிநின்று அதனைக் காரியப்படுத்தும் அருள்வலி ஆதலின் ஆணவத்தில் அடங்கும்.

17. இனி, கட்டு (பாசங்)களில் ஒன்றுக்கும் மற்றொன்றுக்கும் உள்ள தொடர்பு சிறிது கருதுவாம். மும்மலங்களில் ஆணவமலமே மூலமலம் என்று நூல்கள் கூறுகின்றன. ஆகமங்களெல்லாம் ஆணவத்தை மலம் என்ற சொல்லால் வழங்குகின்றன. எழுநூறு ஆண்டுகளுக்கு முன் தோன்றிய சிவஞான போதங்கூட ஓரிடத்திலன்றி பிற இடங்களிலெல்லாம் ஆணவத்தை மலமென்றே கூறுகின்றது. ஆணவம், மாயை, வினை மூன்றும் அநாதியாயுள்ள மலங்கள் என்று ஓரினமாய்ச் சேர்த்துக் கூறப்பட்டாலும் ஆணவ மலத்துக்கும் மாயை வினை மலங்களுக்கும் வேறுபாடு உண்டு. அநாதி என்பது காலவரையறைக்குட்படுத்தி அளவை நூல(Logic)ளவைகளைக் கொண்டு பேசி முடிவு செய்ய வொண்ணாதது. ஆணவமலம் உயிருக்கு உடனுள்ள மலம் (சகசமலம்) என்றும், மாயை வினை என்பன இடைவந்த மலங்கள் (=ஆகந்துக மலங்கள்) என்றும் கூறப்படும். நெல் என்று உள்ளதோ அன்றே அதனோடு உமியுஞ் சேர்ந்து உள்ளதுபோல, உயிர் என்று உள்ளதோ அன்றே ஆணவமலமும் அதனோடு சேர்ந்து உள்ளது. உயிர் அழியாது நிலைத்த பொருளாயிருத்தல் போல அதனோடு சேர்ந்துள்ள ஆணவமலமும் அழியாது நிலைத்திருப்பது. விறகுடனே அதுவதுவாய் நின்று கேடில்லாதிருக்கும் தீப்போல ஆணவமலத்தில் அதுவதுவாய் நின்று கேடில்லாதிருப்பது உயிர். விறகிலே தீயிருந்தும் அது இருப்பதாகத் தெரிய வொட்டாமல் விறகு மறைத்தல்போல உயிரிருந்தும் அது இருப்பதாகத் தெரிய வொட்டாமல் ஆணவமலம் அதனை மறைக்கும். விறகைக் கடைந்த வழி அதிலிருந்து தீவெளிப்பட்ட பொழுது அதனில் தீயிருக்கிறது என்று அறியப்படுதல் போல உயிரானது ஐம்புலன் மனம் முதலிய கருவிகளோடு கூடி அறிதலினால் அது அவைகளில் உள்ளது என்று அறியப்படுகிறது. ஆணவமலம் அழியாவிட்டாலும் உயிரினது அறிவு வேட்கைச் செயல்களை மறைக்கும் ஆணவமல வலியானது ஒளிமுன் இருள் கெடுதல் போல, முதல்வனது அருளின் முன் கெட்டொழியும். உயிரைப் பற்றியுள்ள ஆணவமலவலி படிமுறையில் தேய்ந்து தேய்ந்து முடிவில் முற்றிலும் கெடச்செய்தலே உலக வாழ்வின் பயனாகும்.

18. நோய் ஒருவனுடைய உடம்பைப் பற்றியிருக்கும் பொழுது அந்த நோயுடம்பிற்கு மருத்துவன் மருந்துகொடுத்து நோயைத் தீர்த்தல்போல ஆணவமலம் உயிரைப் பற்றிக்கொண்டிருக்கும்பொழுது முதல்வன் அந்த உயிருக்கு உடல் உட்கருவி நிலம் நுகர்பொருள்கள் (தனுகரண புவன போகங்கள்) ஆகிய மருந்தைக் கொடுத்து அவைகள் மூலமாய் அறிவு, வேட்கை, செயல்கள் விளங்கும்படிசெய்கிறான். ஆணவமலம் பற்றியுள்ள உயிரிடத்தில் முதல்வன் தனது அருள்வலியைச் செலுத்தி

தனர் என்று பார்க்கின்றோம். மணம் நிகழ்ந்த முதலாண்டில் ஆடித் திங்களில் மணமக்களைப் பிரித்து வைப்பது இன்றும் பின்பற்றப் படுமொரு வழக்கமாக விருக்கின்றது.

இயக்கமுந் தூக்கமும் பகலிரவைச் சார்ந்து நடக்கின்றன. ஆண்டில் ஆறு மாதம் பகலாயின் இயக்கத்திற்கேற்ற காலம் அதுவாகின்றது. இப்பகற் பொழுது தைம்மாதத்தில் தொடங்குவதால், அதற்கு முந்திய மார்கழித் திங்கள் விடியற் கால நேரமாகின்றது. ஆடியில் ஆரம்பித்த இருளோடு தோன்றுந் தூக்கம் நீங்குங் காலமிதுவே. தூக்கம் நீங்கி இயக்கந் தொடங்கும் நிலையைத் திருப்பள்ளி எழுச்சி என வழங்குவர். இங்ஙனம், இருள், குளிர்ச்சி, தூக்கம் ஆகிய பெண் தன்மைகள் ஒரு புறமாகவும், வெளிச்சம், வெப்பம், இயக்கம் ஆகிய ஆண் தன்மைகள் மறுபுறமாகவுங் கூடி நிற்கின்றன. இயக்கம் என்ற கருத்திற் குறிகுறியாக முன்னோர் எடுத்துக்கொண்டது தாண்டவமாகும். தாண்டவம் சிறப்பாய்ச் சிவனுக்குரிய தென்பது முடிந்தபொருள். இங்ஙனமே, தூக்கம் திருமாலுக்குரியது. ஆடுகின்றவனைச் சிவனைப் பெரும்பாலுங் கூறுகின்ற வண்ணமே தூங்குகின்றவனைத் திருமாலைக் கூறுகின்றனர். பாற் கடலிலும், ஆலிலையிலும் பள்ளி கொள்ளும் நிலையில் மாயவன் தீட்டப்படுதலை அறியார் யார்? இயக்கத்திற்குந் தூக்கத்திற்கு முள்ள தொடர்பே, ஒலிக்கும் அமைதிக்கும் உளதென்று சொன்னோம். கூத்தாடுஞ் சிவன் கையில் உடுக்கை தோன்றுவது இது பற்றியேதான். அமைதியிலிருந்து ஒலி தோன்றிற்றோ, அல்லது, ஒலிக்குப்பின் அமைதி தோன்றிற்றோ? இயக்கம் முந்தியதோ, தூக்கம் முந்தியதோ? என்ற வினாக்களுக்கு விடை யளிக்க யானருகனல்லன். இயக்கமின்றித் தூக்கமில்லை; தூக்கமின்றி இயக்கமில்லை.

"அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே"

என்ற சைவப் பெரியார் மொழி இதுபற்றி எழுந்ததே.

---



ளில் தமிழுலகத்தில் வடக்கிருத்தல் என்றொரு வழக்கமிருந்ததென்று புறநானூற்றின் 65, 66-ம் செய்யுட்களால் அறிகின்றோம். ஆதலின் அந்நாளிலேயே வடதிசை மிகச் சிறப்புடையதென்று கருதப்பட்டதென்பது தெரிகின்றது. இந்நாளில் தெற்கிருந்து வடக்கே போகலாம், வடக்கிருந்து தெற்கே செல்லலாகாதென்று சொல்வாருளர். குமரி முனைக்குத் தெற்கே நீண்டு பரவியிருந்த தமிழ் நாட்டைக் கடல் கொண்ட பெரிய நிகழ்ச்சியின் பயனாக மக்களிவ்வாறு நினைக்கலானாரோ என்று ஐயுறக் கிடக்கின்றது.

"எந்நிலத்து வித்திடினும் காஞ்சிரங்காழ் தெங்காகா
தென்னாட்டவரும் சுவர்க்கம் புகுதலால்
தன்னாற்றான் ஆகும் மறுமை வடதிசையும்
கொன்னாளர் சாலப் பலர்" (நாலடியார்)

என்ற செய்யுளை நோக்க, சமணர்க்குள்ளும் தென்றிசை இழிவினதாக எண்ணப்பட்டதென்பது வெளியாகிறது. இதற்குக் காரணம், போக பூமியை அவர்கள் வடதிசையில் வைத்ததேயாகும்.

பகற்பொழுது நீளும் உத்தராயனம் தைம் மாதத்தில் தொடங்கி ஆனியில் முடிவடைகின்றது. இருட்டு வளர்கின்ற தக்ஷிணாயனம் ஆடி தொட்டு மார்கழி வரையில் நடைபெறுகின்றது. வெளிச்சம் பெருகுகின்ற தைம் முதல் ஆனி வரையிலுள்ள ஆறு மாதங்களையும் பகற்பொழுதென்றும், இருள் மிகும், ஆடி முதல் மார்கழி வரையிலுள்ள ஆறு மாதங்களை இரவுப் பொழுதென்றுங் கொள்வோமாயின், ஓராண்டு ஒரு நாளாகின்றது. ஓராண்டு தேவர்கட் கொருநாள் என்பது பழைய கொள்கை. இக்கொள்கைக் கேற்ப, காலை நேரமாகிய தைத்திங்களில் நீடித்து நிற்குந் தொழில்களைத் தொடங்குகின்றனர்; மாலைப் பொழுதாகிய ஆடித் திங்களில் நற்காரியங்களை ஆரம்பிக்க மக்கள் அஞ்சுகின்றனர். இவ்வச்சம் தகுதியுடைத்தோ, அன்றோ? என்ற கேள்வி இவ்வாராய்ச்சிக்குப் புறம்பானது. பாரதப்போரில், தக்ஷிணாயனத்தில் காயமடைந்த ஒருவர் உத்தராயனம் வருமட்டும் உயிரை விடாது வைத்திருந்

# கருமை

## [திருக் கபசம் அவர்கள்]

(சசஉ-ம் பக்கத் தொடர்ச்சி)

பெண் என்ற சொல்லை வழங்குங்கால் உருவத்தை நீக்கி நினைப்பின், கருமை என்ற கருத்து வெளிப்படும் வகையை யுற்று நோக்கினோம். கரிய பெண்களை உலகிலெவரும் விரும்புகின்றிலர் என்று சொல்கின்றனர். இதில் எத்துணை உண்மையுண்டென்பது ஆராய்தற்குரியது. அவ்வாராய்ச்சி நிகழ்தற்கிடமிதுவன்று. கரிய நிறமங்கையரி னழகு, பற்றற்றோ ரென்பார் கருத்தையும் ஈர்க்கும் பான்மையதென்று கூறுவாருமுளர். நிற்க.

இயக்கம், தூக்கம் என்பன பகலிரவை முறையே காலமாகக் கொண்டு நடக்கின்றன வென்று முன் கூறப்பட்டதை ஈண்டு நினைவிற்குக் கொணர்தல் வேண்டும். பகலு மிரவும் எப்பொழுதும் ஓரளவினவல்ல. பகல் நீடித்திருக்குங் காலமுமுண்டு; இரவுப் பொழுது மிகுங் காலமுமுண்டு. சித்திரை, வைகாசியில் பகல் நீண்டு இரவு குறுகுகின்றது; கார்த்திகை மார்கழியில் இரவு நீண்டு பகற்பொழுது குறைகின்றது. பகலின் நீட்டமும் கதிரவன் வடதிசை ஏகலும் (உத்தராயனம்) ஒத்து நடக்கின்றன. இவ்வாறே, இரவு மிகலும் கதிரவன் தென்திசை செல்லலும் (தக்ஷிணாயனம்) ஒன்றி நிகழ்கின்றன. இது குறித்துப் போலும் வடதிசையை நற்றிசை (புண்ணிய திசை) என்றும், தென் திசையை அழிவுதிசை என்றுங் கருதும் வழக்கம் எழலாயிற்று. இருள் மூடிக்கிடக்குங் கூற்றுவன் உலகம் தென்பாலுளது என்ற கொள்கையும் மேற்குறித்தவற்றைத் தொடர்ந்து தோன்றியிருக்கலாம். தெற்கே செல்கின்ற ஞாயிறு அப்படியே போய்க் கொண்டிருந்தால் பகலென்பதே அற்றுப் போய் உலகம் இருள்வாய்ப் படுமென்ற அச்சம் பண்டைக்காலத்து மக்களுக்குண்டாவது இயற்கையே. ஆதலின், தெற்கே சென்ற ஞாயிறு வடக்கே மீளும் நாளை (ரதசப்தமி) அவர்கள் திருநாளாக்கி மகிழ்ந்தனர். தொன்று



ளம் களித்தூஞ்சலாடுகின்ற தன்றோ? ஆஹா! இன்பத்தின் முழுப்பேறும் இன்னே பெறச்செய்த இவ்வீரன் யாவன்? அவன் செய்த அளப்பரும் நன்றி இத்துடனமைவதொன்றோ? உடலினின்றும் நீங்கப்புகும் உயிரையு மன்றோதடுத்து உய்வித்தான்? ஒருவர்க்கொருவர் செய்யும் உபகாரம் இவ்விரண்டினும் சிறந்தது பிறிது எங்குண்டு? எனப் பெரிதும் வியந்து களிப்புற்றாள். இங்கு நாம் நினைக்கத் தகுவது ஒன்று, இவ்வுலகில் எவரும் ஏனைஉயிர்க்கூட்டங்கள் பலவும் மிக விரும்பும் விருப்பங்கள் இரண்டே. அவற்றுள் ஒன்று உயிர்த்திருத்தல், மற்றொன்று வாழ்க்கைகள் இன்பத்தையே நுகரப்பெறுதல். எத்துணைவிருப்பப் பகுதிகள் மேன்மேற் கிளம்பினும், இவ்விரண்டனுள் ஒன்றன்பாலதே யாகுமாதலின் அத்துணை உயர்வும் சிறப்புமுடைய இவ்விரண்டையும் தனக்குதவினைதலின் இதின் உதவியுண்டோ என வினவிக் கூறினள்.

உயிரைத் தருதலைப் பிற்கூறி "உருக்கினன் உணர்வை" என முற்கூறலின், உயிர்வாழ்க்கையும் இன்ப நுகர்ச்சிக்கண் வேண்டுதலல்லது துன்பநுகர்ச்சிக்கண் வெறுக்கப்படும் இயற்கை சுட்டப்பட்டது. ஆகவே உணர்வு உருக்கத்தால் வரும் இன்பம் ஒன்றே பேரின்பமாவதென்றும் அது பெறுதுமென்னும் உயரிய நோக்கத்தாலேயே உயிரு மோம்பப்படற் குரியதென்றும், கண்டாம். உணர்வு உருக்கம், மனம் வேறோர் சிந்தனையுமறத் தனக்கின்பந்தரும் நித்தியப்பொருளை நாடி நின்று அதுவதுவாய் விளங்கப் பெறுதலோ அல்லது அப்பரம் பொருட்குத் தான் அடிமை என்னு முண்மை தேர்ந்து அதற்கேயன் புகூர்ந்து இடையீடின்றி நினைந்துருகுதலோ ஆகிய இவ்விரண்டானும் வாய்ப்பதொன்றாமென்றும் நுணுகி அறிந்துய்யுமாறு அருட் பெரும் பொருள் பொதிந்துள்ளது, இவ்வொரு செய்யுளின் பெற்றி என்க.

(தொடரும்)

ருக, இதன் வருகையால் யானெய்தற்பாலது ஒன்று துன்பமாக லாம் அல்லது என் துன்ப பரிகாரமாகலாம் என்றும் துணிவுற் ருள். இத்துணிவினும் முன்னே கொடுமையாக என்று கூறிப் பின்பே இரக்கமேயாக என்றும் கருதினுள். "பட்ட காலிலேயே படும்" என்னும் பழமொழிப்படி நாட்டை விட்டுக் காட்டிற் கால் வைத்த நாள் முதல் படிப்படியாய்த் துன்பமேதொடர்ந்து வந்ததை அநுபவித்த பழக்கத்தால் தனக்கு இன்பம்வருமென்ற நம்பிக்கையில் அவள் ஆழ்ந்தாளிலள். துன்பம் நேராவிடின் ஓர்கால் இன்ப காரணமாகலாம் என்றும் பிற்படக் கருத நேர்ந் தது. ஆயின், அரக்கனேயாக, அமரனேயாக, குரக்கினத்தலை வனேயாக, கொடுமையாக இரக்கமேயாக எனச் சொற்களை விரித்துப் பராமுகமாக்கலின் அவளது உள் நோக்கம் இவற்றை ஓர் பொருளாகக் கொள்ளவில்லையென்றும், அஃது இவற்றினும் மிக முக்கியமான வேறொன்றேயா மென்பதும் உணர்த்தப்பட் டது. அதாவது "இங்கு வந்து எம்பிரான் நாமம் சொல்லி உருக்கினன் உணர்வை; தந்தான் உயிர், இதின் உதவியுண்டோ?" என்பதேயாம்.

இங்கு என்பது இடத்தையும் அதனேடு தொடர்புற்ற காலத்தையும் உணர்த்தலால், யாவரும் உறங்கும் இந்நிசி வேளை யில், யான் உயிர் துறக்கவிருக்குங்கணத்தில் இராவணன் ஆணை யின்றி யாவரும் சேர்தற்கொண்ணுத இவ்விடத்தில் வந்தனனே! வந்தவன் வேறு கூறுமல் என்னுள்ளம்புக் குறையும் பிராணேச னது திருநாமத்தையே உச்சரித்தனனே! அவனது திருமேனி யைத் தீண்டற்கும் காண்டற்கும் ஏக்குற்று, அருகில் கிடக்கும் இக்கடலின் பச்சையுருவத்தையும் அதிற் படர்ந்து தோன்றும் பவளத்தையும், முத்துக்களையுங்கண்டு அப்பெருமானது சிவந்த வாயின் புன்முறுவலைக் கருதிச் சிறிது மகிழ்வுற்றிருப்பேற்குச் செவியிலூட்டிய அமுதம்போல அம்மொழி புகலும் உள்ளங் குளிர்ந்து உவப்பூறுகின்றதன்றே? என்னுணர்வு ஒரு வழிப் பட்டுப் பரவசமெய்துகின்றதன்றே? என் துன்பங்கள் வேரோடு தொலைய இன்பக் கடலின் தண் [illegible] தேறி என் உள்





"இராமதூதன் நான்" என்று உரத்த குரலோடு கூவிக் கொண்டு எதிர்தோன்றிய அநுமனை நோக்கி விம்மிதமுற்று மருண்ட சனகி தனக்குள் நினைப்பதாகவரும்,

**அரக்கனே யாக வேறோ ரமரனே யாக வன்றிக்**
**குரக்கினத் தலைவ னேதா னுருக கொடுமை யாக**
**இரக்கமே யாக வந்திங் கெம்பிரா னுமஞ் சொல்லி**
**யுருக்கின னுணர்வைத் தந்தா னுயிரிதி னுதவி யுண்டோ,**

என்னுங் கவியை நோக்குவோம்.

அநுமனைத் திடீரென நோக்கிய தொடக்கத்தே சனகிக்கு இவன் ஓரரக்கனோ? அல்லது தேவனோ? அன்றி உள்ளபடியே ஓர் குரங்கோ? என்று முறையாக எண்ணம் தோன்றிற்று, ஏன் எனில் ஓர் சன்யாசிவேடம் பூண்டுவந்த இராவணனால்தான் இத்தகைய துன்பம் அடைய நேர்ந்ததை ஓயாது நினைக்கின்று ளாதலானும் அரக்கர்கள் வாழும் ஊரில் காமரூபிகளாகிய அவர் கள் பற்பல மாயவேடம் பூண்டுவந்து தன்நிலைமையைச் சோதிக்க வருதலும் கூடும் என்று திகில் கொண்டிருக்கின்றுளாதலானும், ஒருவர் தம் எண்ணத்தில் எப்போதும் நினைத்துக்கொண்டிருக் கும் பொருளாகவே எதிர் தோன்றும் வேறு பொருட்களையும் மயங்கிக் காண்ப தியற்கையின் தன்மையாகலானும் தன்னெஞ் சில் மேலாடியிருந்த எண்ணத்தால் அரக்கனோ? என்றே நினைக்க நேர்ந்தது. ஒருகால் அரக்கன் அல்லனுனலோ, ஓர் தேவனே யாகவேண்டும் எனப் பின்கருதுவாளாயினள். முதலில் வனம் புகுந்தபோது விராதன் என்பான் ஓர் அரக்கன், இவ்வாறு முன் னே தோன்றிப் பின் ஒரு விஞ்சையனுக உருமாறின செய்தியும், தன் கருத்துட் கிடந்து நினைவுக்கு வருதலின் இவனும் தோன் றிய தோற்றம் பொய்த்துப் பின் வேறு சிறந்த உருவங்கொள்ள வும் கூடுமென நினைத்ததால், இவ்விரண்டு வகையும் இல்லையேல் உண்மைத் தோற்றமாகவே மாறுதிருக்கவேண்டும் என்பது நிச் சயமாகலின் குரக்கினத்தலைவனே தானுருக! என்றுங்கூறி அவ் வெண்ணத்தின் ஐயப்பாட்டை மாற்றினுள். இங்குத் தோன் றும் இவ்வுருவம் மேற்கூறிய மூவகையில் ஒன்றுகவே யிருக்கு மன்றி வேறிராதென்னை தேற்றமே, ஆதலின், அவ்வுருவம் இர

முடிப்பாய் என்பதும் நான் நன்கறிந்ததே. ஆயினும் என்னுடைய மிகுந்த பேதமைக்குள் மிகச் சிறிதாய்த் தோன்றும் அற்பமதி, பெண் பிறப்போடுகூடிய தன்மையால் நீ கூறும் அச்செயல் தகுதியுடையது அல்லவென்று நினைக்கின்றதுண்டு, என்றிவ்வாறு கூறினள், எனச் சீதையின் கூற்றாகக் கூறுகின்றார்.

இதில், உரியது அன்று என்று ஏரேமொழியில் கூறாது 'உரியது அன்றுஎன ஓர்கின்றதுஉண்டு'என நீட்டிப்பேசியதாகக் காட்டப்பட்டது. இச்சொல்லைக் கூறுகையில் அவள் மனம் மிகத் தடுமாற்றத்தை அடைந்து அவனது முகத்தை நோக்கிக் கொண்டு தன்வார்த்தைகளால் அவ்வுள்ளம் கலங்கி முகத்தில் வேறுபாடான குறிகளைக் காட்டுகின்றதா என்று அஞ்சிக்கூறியதாகக் கவி அவ்வியற்கையை நன்கு விளக்குகின்றனர்.

நல்லிசைப் புலவர்களது கவிகள், சொற்கள் சிலவற்றால் பற்பல அரும் பெரும் பொருட்களை நவநவமாய்த் தோற்றுவிக்கும் பெருமை சான்றனவாகும். அவ்வியல்பை நமது புலவர் பெருமானாரே "சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமும் பயின்று சான்றோர்-கவியெனக் கிடந்த கோதாவரி..." என்றும், "...கற்பக மனையவக் கவிஞர் நாட்டிய—சொற்பொருளாமெனத் தோன்றல் சான்றது." என்றும் கூறிச்செல்கின்றார். சொற்கள் எளிதாயினும் பொருட்கள் மிக ஆழ்ந்து கிடக்கும். கிடப்பினும் அவை, நுண்மதியாளர்க்கு உவகையூறும் வண்ணம் தனது பெருமையை உண்மையாக உணர்த்தும்தெளிவுமுடையவாகித் துலங்கும். இவற்றுக்கும் பல மேற்கோள்கள் காட்டலாம். இடம் பெருமை கொண்டு தேர்ந்தெடுத்த சில காட்டுவோம்.

சுந்தர காண்டத்தில் ஆஞ்சநேயர் உருவேற்றிய மந்திரத்தினால் சீதையைச் சுற்றிக் காவலிருந்த அரக்கியர்கள் யாவரும் உறங்கிக் கிடப்ப, அது ஒரு கால வாய்ப்பாகக்கொண்டு, பலவாறு தேர்ந்து சிந்தித்தும், கருத்தை மாற்றி மாற்றித் தானே வினாவியும் விடைதந்தும் கடையியாக "இறத்தலே அறத்தின் ஆறு" என எண்ணித் துணிந்து தற்கொலை செய்துகொள்ள முற்பட்டு அச்செய்கையைச் செய்துகொள்ளப்புக்க தறுவாயில்



வில்லை. இந்த விதமான மாயங்கள் அது எப்போதும் செய்கின்றது. சிலவேளை எங்களுக்கு உணவு கிடைக்கப்பண்ணும்; சிலவேளை உணவு கிடைப்பதைக் கெடுத்து விடும். பேய் பிடிப்பதென்று உலகத்தார் சொல்லுவது உண்மையானால், இதற்கும் பேய் பிடித்திருக்கின்றது என்று நான் சொல்லுவேன்.

(எல்லாரும் ஊரை நோக்கி நடக்கிறார்கள்.)

அறவ.—ஆ! என்ன அறியாமை! பசித்துக் களைத்து ஓரிரவு ஒதுங்க இடந்தேடி வரும் ஏதிலர்களுக்கு அன்னமிடுவது எவ்வளவு புண்ணியம் என்று அறிவார்களானால், நமது அயலவர்கள் தமது நாய்களை எல்லாம் கட்டி வைப்பதோடொழியாது தங்கள் சிறுவர்களை ஒரு கல்லுத்தானும் எறிய விடமாட்டார்களே!

**மயிலி.**—அவர்கள் இவ்வாறு நடப்பது அவர்களுக்குப் பெரிய இழிவாவதோடு லெ நம் பாவமுமாகும். இது நிச்சயம். நான் இப்போது போய் அவர்கள் எவ்வளவு கொடியவர்களென்பதை அவர்களுக்குச் சொல்லப் போகிறேன்.

**பரம.**—அவர்கள் ஒருவராவது உன் கண்ணில் அகப்படமாட்டார்கள் என்று நான் அஞ்சுகிறேன்.

**பார்வதி.**—ஏழை எளியவர்களைத் தமது உடன் பிறந்தவர்கள் போல எண்ணி மன மிரங்காத மனிதர்கள், உலகத்தில் உயிரோடு வாழ்தற்குத் தக்கவர்களல்லர்.

**பரம.**—அதிருக்க. அன்பர்களே, நீங்கள் இப்போது சொல்லுகின்ற அந்த ஊர் எங்கே இருக்கிறது? எந்தப் பக்கத்திலே? என் கண்ணுக்குத் தெரியவில்லையே.

(அறவனும் மயிலியும் அந்த ஊர் முழுவதும் நீர் மூடியிருக்கக் கண்டு ஆச்சரியப்படுகிறார்கள்.)

**மயிலி.**—ஐயோ நமது எளிய அயலவர்களுக்கு என்ன பெரிய விபத்து நேரிட்டு விட்டது!

**பார்வதி.**—அவர்கள் இப்போது மனிதப் பிறவிகளாயில்லை. அவர்கள் மனிதர்களாய் இதுவரையும் இருந்ததனால் உலகத்துக்கு ஒரு பிரயோசனமுமில்லை.

மயிலை.—என்ன ! (சிரித்து) நீர் என்ன வென்றாலும் சொல்லும். இவர்கள் சாதாரணமான மனிதர்கள் அல்ல.

அறவ.—ஆம், ஆம். அப்படி இருக்கலாம். அவர்கள் முன் நல்ல நிலைமையில் இருந்தவர்களென்றே தோன்றுகிறது. அவர்கள் அவ்வாறு பரிவுடன் உண்பதைப் பார்க்க எனக்குச் சந்தோஷமாயிருக்கிறது.

பரம.—என்ன இனிமையான பழம்! தாயே, இது எவ்விடத்துப் பழம், அம்மா ?

அறவ.—எங்கள் தோட்டத்துப் பழம், அதோ வாழை, அந்த வேலிக்கப்புறத்தே தெரிகிறது , பாரும். ஆனால் நாங்கள் இந்தப் பழத்தை அவ்வளவு நல்லது என்று எண்ணவில்லை.

பரம.—நான் இதைப்போல் இனிமையான பழம் ஒரு போதும் சாப்பிட்டதில்லை. இந்த இனிய பாலிலே இன்னுமொரு லோட்டா வாரும். அப்போது நான் ராசாவைப்போல் திருத்தியாகச் சாப்பிட்டவனுவேன்.

(அறவணன் பார்த்தபோது வெறுவிதா யிருந்த சாடி கையில் எடுக்கும்போது பால் ஊறி நிரம்புகின்றது).

அறவ.—இந்தப்பெரிய இந்திரஜாலம் செய்கின்ற நீங்கள் யாரையா ?

பார்வதி.—உங்கள் விருந்தினர், ஐயா ; உங்களுக்கு அன்பர்களுமாவோம். எனக்கும் ஒரு லோட்டா பால் வாரும். உமக்காவது, உமது மனைவிக்காவது, வழி நடந்திளைத்து உங்கள் உதவியை நாடி வரும் வழி போக்கர்களுக்காவது, உங்கள் ஜாடி என்றும் பால் குறையாதிருப்பதாக!

அறவ.—(பரமசிவனைப் பார்த்து). இந்தப் பழஞ் சாடிக்குள்ளே எங்கிருந்தையா பால் அருவிபோல ஊறுகிறது.

பரம.—(தமது தண்டைக் காட்டி) இந்த மாயமெல்லாம் இதனுடைய செய்கை. உம்மால் அது எவ்வாறென்று உணர்ந்தறியக் கூடுமானுல், எனக்கும் சொல்லும் ; நான் கேட்கிறேன். இந்தத் தடியை என்னென்று சொல்வதென்று எனக்குத் தெரிய



பரம.—(ஒரு லோட்டா பாலை எடுத்துக் குடித்துவிட்டு) அம்மணீ, இன்னும் கொஞ்சம் பால் வாருங்கள். இன்று வெயிலதிகம்; அதனுல் எனக்கு மிகவும் தாகமா யிருக்கின்றது.

மயிலை.—ஐயா, எனக்கு மிகவும் துக்கமாயும் வெட்கமாயும் இருக்கின்றது. ஏனெனில் சாடிக்குள்ளே கொஞ்சம் பால் கூட இல்லை. (அறவணனை நோக்கி) நாங்களேன் இன்று சீக்கிரமாகச் சாப்பிட்டோம் !

பரம.—நீர் ஏதோ மறதியாகச் சொல்லுகிறுப்போ லிருக்கிறது, அம்மணீ. சாடிக்குள்ளே பாலில்லாமல் இல்லை ; வேண்டிய பாலிருக்கின்றது.

மயிலை.—(சாடியை எடுத்துப் பாலை வார்த்து விட்டு மறைவாக) எனக்கு வயதாய் விட்டது ; அதனுல் மறதி அதிகம். நான் தவருகத்தான் பால் இல்லை என்று சொல்லி விட்டேன் என்று எண்ணுகிறேன். எப்படியிருந்தாலும் சரி. இரண்டு தரம் லோட்டா நிறைய வார்த்ததன் பின், இனி எங்கே யிருந்து பால் வரப் போகின்றது ?

பரம.—ஆ ! என்ன இனிமையான பால் ! என் தாயே என்னைக் கோபியாதே. எனக்கு இன்னும் கொஞ்சம் பால் வார்.

(மயிலை வெறுவிதாயிருந்த சாடியை எடுத்து, மிகுந்த அதிசயத்தோடு வார்க்கிறுள். பால் லோட்டா நிரம்பி வழிகின்றது.)

பரம.—அம்மணி, இன்னும் கொஞ்சம் கூழும் கொஞ்சத் தயையுடனும் கொடு.

மயிலை.—(அறவணனுக்கு மறைவாக) இது மாதிரி நீர் கேட்டதுண்டா ?

அறவ.—இல்லை; நான் ஒரு போதும் கேட்டதில்லை. நீ நித்திரைத் தூக்கத்திலே உளறுகின்ருய் என்று எண்ணுகிறேன். நான் பால் வார்த்திருந்தேனேயானுல், பால் மிஞ்சி இருக்கிறதா, இல்லையா என்று பார்த்திருப்பேன். நீ லோட்டாக்களில் வார்த்த பிற்பாடும் சாடிக்குள்ளே பால் கொஞ்சம் மிஞ்சியிருந்தது. அது தான் உண்மை காரியம்.

சாப்பிடாது போகக்கூடாது. ஆதலால் நீங்கள் வருவது தெரிந்திருந்தால், நாங்கள் சாப்பிடாமல் இருந்திருப்போம். மாலையாகி விடவே, நீங்கள் வருவதற்கு முன்பே நாங்கள் சாப்பிட்டு விட்டோம். அதனால் மோர்கூட இல்லை. கூழ்தான் கொஞ்சம் இருக்கிறது. இந்தக் கூழையும் சாப்பிட்டு, பாலும் கொஞ்சம் கொண்டு வந்தேன்; அதையும் குடியுங்கள். இன்னுஞ் சற்றுப் பொறுத்து வந்திருப்பீர்களானால் பால்கூட இராது. உறைகுத்தியிருப்பேன். என் செய்வேன்! எங்களால் முடிந்தது இதுதான். நான் எங்கள் வறுமையைப்பற்றி நொந்து கொள்வது யாராவது வழிப்போக்கர்கள் விருந்தாக எங்கள் குடிசைக்கு வந்தபோது தான்.

**பார்வதி.**—அம்மணீ, இதுபோதும் எங்களுக்கு நீ வருத்தப்பட வேண்டாம். தயவாக, இன் சொல்லோடு கொடுக்கும் உணவு, எதுவாயினும், தேவாமிர்தத்துக்குச் சரி.

**மயிலை.**—இன்சொல்லுக்குக் குறைவில்லை. ஆனால் அதனால் வயிறு நிறைந்து விடுமோ? (**அறவணன் ஒரு சீப்பு வாழைப்பழம் கொண்டுவந்து கொடுக்கிறான்**) நல்லது. இதோ கொஞ்ச வாழைப் பழமு மிருக்கிறது.

**பரம.**—(**சிரித்துக்கொண்டு**) அம்மணீ, இது ராஜ போசனம். இல்லை, இல்லை; தேவருணவென்றே சொல்லலாம். நீ பார், நான் எவ்வளவு ஆவலோடு சாப்பிடப் போகிறேன் என்று. இதைக் கண்டவுடனே எனக்கு என்ன பசி தோன்றுகிறது; தெரியுமா?

**மயிலை.**— (**அறவணனுக்கு மறைவாக**) என்ன பாவம்! இவருக்கு அவ்வளவு பசியானால், நான் கொண்டு வந்தது இவர்களுக்கு அரை வயிற்றுக்குத்தானும் போதாதே.

(**மயிலை சொன்ன மாதிரி பசித்துவந்த இருவருக்கு அவள் கொண்டு வந்த உணவு போதாது. ஒரு சிறு சட்டி கூழும் கொஞ்சம் துவையலும் ஒரு பாத்திரத்தில் வைத்திருந்தன. ஒரு சீப்பு வாழைப்பழமும் பக்கத்தில் இருந்தது. ஒரு சாடியில் அரைவாசிக்குப் பாலும் இருந்தது. அந்தப் பாலை மயிலை இரண்டு லோட்டாக்களில் வார்த்து அவர்களுக்கு முன் வைத்தாள். பின்பு அடிச் சாடியில் கொஞ்சப் பால்தான் மிருந்திருந்தது.**)



**அறவ.**—(**தடியை உற்றுநோக்கி**) இது என்னதடி ஐயா? சூலம் போலக் கவையுடையதா யிருக்கிறதே. சிறுவர்கள் குதிரை ஏறி விளையாடுவதற்கு ஏற்றதா யிருக்கின்றது.

**பரம.**—ஆம்! ஆம்! இது ஒரு விந்தையானதடி. வெகு வேலைகள் செய்யும், ஐயா. வழி நடப்பதற்கு உற்ற துணை, கையில் ஒரு தடிபோல், வேறு ஒன்றும் இல்லை.

**அறவ.**—இதுதான் எனது குடிசை (**ஓராசனத்தை எடுத்து இட்டு**) இதோ இந்த ஆசனத்தின்மேல் இருங்கள். எனது மனைவி மயிலி உங்களுக்குச் சாப்பாட்டுக்கு என்ன இருக்கிறது என்று பார்க்க உள்ளேபோ யிருக்கிறாள். நாங்கள் ஏழைகள்; ஆனாலும், எங்கள் குடிசையில் இருக்கிறதெல்லாம் உங்களதே.

**பார்வதி.**—இப்போது (**கையால் சுட்டிக்காட்டி**) இந்தக் குடிசைகளிருக்கிற இடம் ஆதியில் ஒரு குளமாயிருக்க வில்லையா?

**அறவ.**—என் காலத்தில் இல்லை, தாயே; நானும் தொண்டு கிழவனாய் விட்டேன். இப்போதுள்ளது போலவே இது எப்போதும் தூரவும் தோட்டமும் வயல் வெளியுமாயிருந்தது. அதோ, அங்கே, ஆகாயத்தை அளாவி உயர்ந்து வளர்ந்திருக்கிற மரங்கள் இன்று போலவே அன்று மிருந்தன. இந்த வயல்களுக்கு நடுவே ஓடுகின்ற சிற்றாறும் அப்படியே அன்றுமுதலோடுகின்றது நான் அறிந்தவரையில் எனது தகப்பனார் காலத்திலாவது, அதற்குமுன் எனது பாட்டனார் காலத்திலாவது, இது வேறு விதமாக விருக்கவில்லை, நான் கிழவன் செத்து மாண்டபிற்பாடும் இது இப்படியே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

**பார்வதி.**—அப்படி நிச்சயமாய்ச் சொல்ல முடியாது. இந்த உலகத்திலே மேடு பள்ளமாவதும் பள்ளம் மேடாவதும் சகஜம். ஏழை எளியவர்கள்மேல் இரக்கமென்பது சிறிதும் இல்லாத இந்த ஊரில் உள்ளவர்களுக்கு இது முன்போலவே குளமாகி, இந்த வீடுகளெல்லாம் நீரில் முழுகிப்போவது தக்க தண்டனையாகும்.

(**மயிலை கூழும் பாலும் கொண்டு வருகிறாள்.**)

**மயிலை.**—ஒருவர் வீட்டிற்கு விருந்ினராக வந்தவர்கள்

ம.—இந்த மாதிரிக் குழந்தைகள் கூவினதும் இல்லை!

(சிறிது தூரத்திலே வழிச்செல்வோர் இருவர் சிறுவர்கள் பின்னே நின்று கூவவும் நாய்கள் குரைத்துத் துரத்தவும் வருகிறார்கள்.)

அ.—அதோ பார், மயிலி! இரண்டுபேர் வருகிறார்கள். வா, நாமிருவரும் போய், அவர்களை எதிர் கொள்வோம். அயலிலே நடந்ததைக்கண்ட பிறகு, அவர்களுக்கு இந்த மேடேறி நமது வீட்டுக்குவர மனம் எழாது; இது நிச்சயம்.

ம.—நீர் போய் எதிர்கொள்ளும். நான் உள்ளேபோய் அவர்களுக்குச் சாப்பாட்டுக்கு என்ன இருக்கிறது என்று பார்க்கிறேன். கொஞ்சக் கூழும் மோரும் இருந்தாலும் போதும் அவர்கள் பசியைத் தீர்ப்பதற்கு.

(பார்வதியும் பரமசிவனும் வருகிறார்கள்.)

அ.—வருபவர்களை எதிர்கொண்டு சென்று, வாருங்கள்! வாருங்கள்! ஏது! வெகு தூரமிருந்து வருகிறீர்கள் போலும்? மிகவும் களைப்படைந்திருக்கிறீர்கள்.

பரமசிவன்.—ஆம், ஆம். நமஸ்காரம். தங்களைப் போலில்லையே இந்த ஊரில் மற்றவர்கள். ஐயா, நீங்களேன் இந்தக் கொடிய ஊரில் இருக்கிறீங்கள் ?

அறவ.—அதுவும் கடவுள் செயல்தான். இந்த ஊரவர்களின் கொடுமையை ஒருவாறு தணிப்பதற்காக ஈசன் என்னை இங்கே வைத்திருக்கிறார்.

பரம.—நன்றாய்ச் சொன்னீர்,, ஐயா நன்றாய்ச்சொன்னீர்! அவர்கள் எங்களை என்ன செய்தார்கள் பார்த்தீர்களா? எங்கள் மேல் இந்த நாய்களை ஏவிவிட்டார்கள். ஒரு நாய் எனது வேட்டியை—(வேட்டியைக் கையிற் பிடித்து) முன்னமே அது பழங்கந்தை, கடித்துக் கிழித்துவிட்டது. ஆனால் நான் அதைச் சும்மா விடவில்லை. இந்தத் தடியாலே (தடியைச் சுழற்றி) ஒன்று அதன் தலைமேலே கொடுத்தேன். அது 'வா அள்' என்று கத்தினது இங்கே உங்களுக்கும் கேட்டிருக்குமே. இந்தச் சிறுவர்கள் குறும்புத்தனமாய், எங்கள் மேல் கல்லும் மண்ணும் விட்டெறிந்தார்கள்.



# அமுத சுரபி

[திரு. தி. த. கனகசுந்தரம் பிள்ளையவர்கள் B. A.]

அறவணன்-மயிலை

ஒரு நாள் அந்திமாலையில் மூத்து முதிர்ந்த அறவணனும், அவன் மனைவி மயிலையும், தமது சிறு குடிலின் முற்றத்திலிருந்து சூரியாஸ்தமனத்தில் தோற்றும் செவ்வானத்தை நோக்கி வியந்து, தமது தோட்டத்தையும் ஆடு மாடுகளையும் பயிர்களையும்பற்றிப் பேசிக்கொண் டிருந்தார்கள். அப்போது சிறுவர்களின் கூவிளியும் நாய்களின் சினத்த குரைப்பும் மிக்கு அவர்களுள் ஒருவர் பேசுவது ஒருவருக்குக் கேட்காதபடி செய்தன.

அறவணன்.—ஏ! மயிலி, நமது அயலிலே யாரோ பிச்சைக்காரர்கள் பிச்சைக்கு வந்தார்கள் போலும். அயலவர்கள், வழக்கம்போலே, அவர்களுக்குப் பிச்சையும் இடாது அவர்கள் மேல் நாய்களையும் ஏவி விட்டிருக்கிறார்கள், பார்த்தையா ?

மயிலை.—என்ன அநியாயம்! ஏழை எளியவர்கள்மீது நமது அயலவர்களின் மனம் சிறிதேனும் இரங்காதா ? குழந்தைகளைத் துடுக் கடக்கி நல்ல பழக்கம் பழக்காமல், பிச்சைக் காரர்மேல் அவர்கள் கல்லு விட்டெறியும்போது முதுகைத் தட்டிக் கொடுக்கிறார்களே ! இது என்னவாய் முடியும் !

அ.—தீமையாய்த்தான் முடியும். ஒரு காலும் அவர்கள் நன்மை அடையப்போவதில்லை. உண்மையாய்ச் சொல்லுகிறேன் ; கேள். இந்தத் தீத்தொழில்களை விட்டுவிடாது போவார்களானால், இந்த அயலிலுள்ளவர்களுக்குப் பெருங்கேடு சம்பவிக்கும் என்பதிற் சிறிதும் சந்தேகம் இல்லை. நீ மாத்திரம், பசிக்கிறது என்று வந்து கேட்பவர்களுக்கு இல்லை என்னாமல், நம்மாலியன்றது, கூழானாலும் சரி, கொடுத்துதவு.

ம.—நீங்கள் சொல்வது சரி, நான் எப்போதும் அப்படியே செய்வேன்.

அ.—இந்த மாதிரி நாய் குலைக்க நான் ஒரு காலும் கேட்டதில்லை

# அமுத சுரபி

[திரு. தி. த. கனகசுந்தரம் பிள்ளையவர்கள் B. A.]

அறவணன்-மயிலை

ஒரு நாள் அந்திமாலையில் மூத்து முதிர்ந்த அறவணனும், அவன் மனைவி மயிலையும், தமது சிறு குடிலின் முற்றத்திலிருந்து சூரியாஸ்தமனத்தில் தோற்றும் செவ்வானத்தை நோக்கி வியந்து, தமது தோட்டத்தையும் ஆடு மாடுகளையும் பயிர்களையும்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது சிறுவர்களின் கூவிளியும் நாய்களின் சினத்த குரைப்பும் மிக்கு அவர்களுள் ஒருவர் பேசுவது ஒருவருக்குக் கேட்காதபடி செய்தன.

**அறவணன்.**—ஏ! மயிலி, நமது அயலிலே யாரோ பிச்சைக்காரர்கள் பிச்சைக்கு வந்தார்கள் போலும். அயலவர்கள், வழக்கம்போலே, அவர்களுக்குப் பிச்சையும் இடாது அவர்கள் மேல் நாய்களையும் ஏவி விட்டிருக்கிறார்கள், பார்த்தையா ?

**மயிலை.**—என்ன அநியாயம்! ஏழை எளியவர்கள்மீது நமது அயலவர்களின் மனம் சிறிதேனும் இரங்காதா ? குழந்தைகளைத் துடுக் கடக்கி நல்ல பழக்கம் பழக்காமல், பிச்சைக் காரர்மேல் அவர்கள் கல்லு விட்டெறியும்போது முதுகைத் தட்டிக் கொடுக்கிறார்களே ! இது என்னவாய் முடியும் !

**அ.**—தீமையாய்த்தான் முடியும். ஒரு காலும் அவர்கள் நன்மை அடையப்போவதில்லை. உண்மையாய்ச் சொல்லுகிறேன் ; கேள். இந்தத் தீத்தொழில்களை விட்டுவிடாது போவார்களானால், இந்த அயலிலுள்ளவர்களுக்குப் பெருங்கேடு சம்பவிக்கும் என்பதிற் சிறிதும் சந்தேகம் இல்லை. நீ மாத்திரம், பசிக்கிறது என்று வந்து கேட்பவர்களுக்கு இல்லை என்னாமல், நம்மாலியன்றது, கூழானாலும் சரி, கொடுத்துதவு.

**ம.**—நீங்கள் சொல்வது சரி, நான் எப்போதும் அப்படியே செய்வேன்.

**அ.**—இந்த மாதிரி நாய் குலைக்க நான் ஒரு நாளும் கேட்டதில்லை !



**ம.**—இந்த மாதிரிக் குழந்தைகள் கூவினதும் இல்லை!

**(சிறிது தூரத்திலே வழிச்செல்வோர் இருவர் சிறுவர்கள் பின்னே நின்று கூவவும் நாய்கள் குரைத்துத் துரத்தவும் வருகிறார்கள்.)**

**அ.**—அதோ பார், மயிலி! இரண்டுபேர் வருகிறார்கள். வா, நாமிருவரும் போய், அவர்களை எதிர் கொள்வோம். அயலிலே நடந்ததைக்கண்ட பிறகு, அவர்களுக்கு இந்த மேட்டிறி நமது வீட்டுக்குவர மனம் எழாது; இது நிச்சயம்.

**ம.**—நீர் போய் எதிர்கொள்ளும். நான் உள்ளேபோய் அவர்களுக்குச் சாப்பாட்டுக்கு என்ன இருக்கிறது என்று பார்க்கிறேன். கொஞ்சக் கூழும் மோரும் இருந்தாலும் போதும் அவர்கள் பசியைத் தீர்ப்பதற்கு.

**(பார்வதியும் பரமசிவனும் வருகிறார்கள்.)**

**அ.**—வருபவர்களை எதிர்கொண்டு சென்று, வாருங்கள்! வாருங்கள் ! ஏது ! வெகு தூரமிருந்து வருகிறீர்கள் போலும் ? மிகவும் களைப்படைந்திருக்கிறீர்கள்.

**பரமசிவன்.**—ஆம், ஆம். நமஸ்காரம். தங்களைப் போலில்லையே இந்த ஊரில் மற்றவர்கள். ஐயா, நீங்களேன் இந்தக் கொடிய ஊரில் இருக்கிறீர்கள் ?

**அறவ.**—அதுவும் கடவுள் செயல்தான். இந்த ஊரவர்களின் கொடுமையை ஒருவாறு தணிப்பதற்காக ஈசன் என்னை இங்கே வைத்திருக்கிறார்.

**பரம.**—நன்றாய்ச் சொன்னீர்,, ஐயா நன்றாய்ச்சொன்னீர்! அவர்கள் எங்களை என்ன செய்தார்கள் பார்த்தீர்களா? எங்கள் மேல் இந்த நாய்களை ஏவிவிட்டார்கள். ஒரு நாய் எனது வேட்டியை— **(வேட்டியைக் கையிற் பிடித்து)** முன்னமே அது பழங்கந்தை, கடித்துக் கிழித்துவிட்டது. ஆனால் நான் அதைச் சும்மா விடவில்லை. இந்தத் தடியாலே **(தடியைச் சுழற்றி)** ஒன்று அதன் தலைமேலே கொடுத்தேன். அது 'வாஅள்' என்று கத்தினது இங்கே உங்களுக்கும் கேட்டிருக்குமே. இந்தச் சிறுவர்கள் குறும்புத்தனமாய், எங்கள் மேல் கல்லும் மண்ணும் விட்டெறிந்தார்கள்.

யார் கூற்று மெய்ப்பொருள் நிலையிட்டுரைக்கும் அறிவுடை நன்மொழியா மென்பதும், இவ்வாறன்றிப் பரங்குன்றில், முருகக் கடவுள் பாமாலை பெறுதற்கெண்ணி யொருகாரணங் காட்டி யவரை மலைமுழையிற் புகுத்திச் செய்யுள் கொண்டு பின் அவரைச் சிறைவீடு செய்து அருள் புரிந்தாரெனக் கூறும் திருப்பரங்கிரிப் புராண முடையார் கூற்று உலகநெறியொடு மாறுகொண்டு இயற்கையின் நடவாச்செயற்கைத் திறத்தைப் புனைந்தெடுத்துக் கூறுதலானும், அதனால் தாம் பாமாலை பெறுதற்கெண்ணுதலின் தன்னைப் பற்றுதலென்னுங் குற்றமும் நடுநிலை திரிந்து பொருத்தமில் காரணத்தாற் சிறை புகுத்தலிற் சமனிலை வழுவுதலென்னுங் குற்றமு மிறைவன் மாட்டெய்துதலானும், இனி, நக்கீரர்தாமு முருகக்கடவுளிடத் தெழுந்த அன்பினாற் செய்யுள் செய்யாது அச்சம்பற்றிச் செய்தாரெனவும், சிவபெருமானையே பாடும் வழுவாநோன்புடையராயின் அந்நோன்போடி கலிப்பின் முருகனைப்பாடினாரெனவும், முருகக் கடவுள் தாமுந் தம்மாற் றொழப்படுந்தன்மையரல்ல ரென்றெண்ணினாரெனின் அது நூலுணர்வும் மெய்யுணர்வுமின்றி முருகனையும் மூத்த பிள்ளையாரையும் உமாதேவியாரையும் இறைவன்றா னொருவனே கொண்ட பல வேறுபட்ட அருட்கோலங்களாமென்று மறைமொழி கிளந்த மந்திர வுரையோடு முரணியக்கோலங்கட்ம்முள் வேறுபாடு கற்பித்துக் கொண்டொழுகுந் தெரிவின்மாந்தரொழுக்கத் தொடுபட்டுச் சிறுமையெய்தினா ரெனவுங்கொள்ளக் கிடக்குமாதலானும் அவருரைபொருந்தா தென்பதும் அறிவுடையா ரெல்லார்க்கு மினிது விளங்குமென்பது. இனித் **திருமுருகாற்றுப்படை**யில் அஃதியற்றப்பட்ட வரலாறு யாண்டுங் காணப்படாது.



தருமி கிழியறுக்கப்புகுந்த வழியாண்டு அதற்குக்குற்றங் கூறினாரென்றல் ஒரு சிறிதும் பொருந்தாமையான், திருவிளையாடற் புராணமுடையார் கூற்று ஆன்றோர் வழக்கொடுமாறு கொள்ளும். மற்றுச் சீகாளத்திப் புராணமுடையார், செய்யுள் பெற்றுக்கொண்ட தருமி யதனை முதலிற் பாண்டியனுக்குச் சென்று காட்ட அவன் உவந்து இதனைச் சங்கப்புலவர்க் கேற்பித்துப் பின் பொற்கிழி பெறுகவென்று கூறினானென்றும், அவ்வாறே யவர் சென்று அதனையுரைப்ப அப்போது நக்கீரனார் குற்றங் கூறினாரென்றும் உலக வழக்கொடும் ஆன்றோரொழுக்கத் தொடும் மாறுகொள்ளாவாறோதுதலின் இஃதுண்மை நிறுத்தும் பொன் மொழியாமென்பது. இனி யிறைவன் புலவனாய்ப் போந்து நக்கீரனாரை நோக்கி யிறுதியில் ஞானப் பூங்கோதையார் குழலு மந்நீர்மையதோவென வினாயினாராகக்கூறும் திருவிளையாடற் புராணமுடையார் கூற்று இறைவி கூந்தலுமத் தன்மையதோவென வினாயினாராகக்கூறும் சீகாளத்திப் புராணமுடையார் கூற்றினுஞ் சிறக்குமாம். என்னை, பொதுப்பட இறைவி கூந்தலை யெடுத்துக்கூறுதலாற் 'கைலை பாதிகாளத்தி பாதியந்தாதி' பாடுதற்குக் காரணம் பிறிதொன்றாற் பெறப்படாமையானென்பது. இனித் திருவிளையாடற் புராணமுடையார் இறைவன்றிறந்த நுதல்விழி வெப்பம் பொறாது நக்கீரனார் பொற்றாமரையில் வீழ்ந்தார் என்பதூஉம், சீகாளத்திப் புராணமுடையார் இறைவன் அவரைக்குட்ட நோய் கொள்க வெனக் கூறினானென்பதூஉம் மாறு படாவாம்.

என்னை! நுதல்விழி திறந்த வளவில் தம்மெய்யில் வெம்மைமிகப் பொறுக்கலாற்றாக் கொடுந்துயர் விளைதலின், மற்றதனைப் பரிகரித்துக் கோடற்பொருட்டுப் பொற்றாமரைத் தடத்தில் வீழ்ந்து, பின் இறைவனருள் சிறிது முகிழ்த்தலின் அதனை நீங்கி வெளிப்பட்ட நக்கீரனாருக்கு முன்பற்றிய வெம்மையால் மெய்நிலைமாறுபட்டுத் தொழுநோய் முதிர்ந்ததென்பது கருத்தாகலினென்க. இனி, நக்கீரனார் கயிலைகாணச் செல்லும் நெறியிற் பூதத்தினாற் கவரப்பட்டுத் திருமுருகாற்றுப்படை மொழிந்து உய்ந்தாரெனக் கூறும் சீகாளத்திப் புராணமுடை

துவரத்துறந்து கரணங்க டேயவாகி யவ்விறைவ னருள்வழி நிற்குந் திருத்தொண்டர் இறைவனை எமக்கு மனைவிவேண்டும், பொருள் வேண்டுமென்று குறையிரந்து கொள்ளாது தங் குறையை யறிவித்தன் மாத்திரையி லமைந்தொழுகுந் தன்மையராகலாற் றிருவிளையாடற் புராணமுடையார் இறைவனிடத் துரிமை யன்பு முறையுளி நிகழ்த்துந்தருமி யென்பவன்றான் சென்றிறைவனை வதுவையயர்தற் பொருட்டுப் பொருடரல் வேண்டுமெனக் குரையிரந்தானாகக் கூறுதல் பொருத்தமின்றாம். இனிப் பாண்டிநாடு முழுவதூஉம் மாரிவறப்ப வளஞ் சுரவாது யாண்டும் வறுமைமிகுந்து மாவுமக்களும் பெரியதோரிடருழந்தா ரென்று அதனைத்தாம் நேரிற் கண்டிருந்த மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் * "பன்னீராண்டு பாண்டி நன்னாடு, மன்னுயிர் மடிய மழைவள மிழந்தது" என்று நிலையிட்டுரைத்தலானும், இறையனாரகப் பொருளுரைப் பாயிரத்தினும் இவ்வாறே கூறப்படுதலானும் அறிவுடை நன்மக்களெல்லாரும் இவ்வற்கடகால நிகழ்ச்சியைத் தழீஇக்கொண்டு மொழிதலானும், சீகாளத்திப் புராணமுடையார் அவ்வற்கட காலத்தின் வறுமை நோய் பொறுக்கலாற்றாது தருமி யென்பவர் வேறு நாடு போதற்கு விடை பெறுதல் வேண்டி யிறைவனைக் குறையிரந்தா ரென்றல் உலக வழக்கொடும் புலனெறி வழக்கொடுந் திறம்பாத மெய்யுரையாம். அல்லதூஉம், தருமி யென்பவர் இறைவனை மனைவி வேண்டும் பொருள் வேண்டு மெனக்குறையிரவாது, வறுமை நோய்களைந்துகோடன் மாத்திரையே குறித்திறைவனை வேண்டினாராகக்கூறும் சீகாளத்திப் புராணமுடையார் கூற்றுப் பெரிதும் நன்கு மதிக்கப்படுவதொன்றாம்; இவர் இவ்வரலாற்றின் மெய்ம்மை யாராய்ந்துணர்ந்து கூறினாரென்பது கடைப்பிடிக்க. இறைவன் றந்த செய்யுளைக்கொண்டு போந்து தருமி யென்னு மறைச்சிறுவன் சங்கப்புலவர்க்குக் காட்டியவழி ஆங்கே நக்கீரனாரதைக் குற்ற முடைத்தென இயம்பாது சங்கப்புலவர் அச்செய்யுளை வியந்து கொண்டுபோய்ப் பாண்டியனுக்குரைப்ப அவனும் உவகைமிக்குப் பொற்கிழி பெறுக வென்ற சொற்படி

* மணிமேகலை, பாத்திரமரபு கூறியகாதை.



யறுக்கப் புகுங்கால் நக்கீரனார் மறுத்தார் என்பர்; இவர், அதனைப்பெற்ற தருமி முதலிற் பாண்டியனிடத்திற் சென்று காட்ட அவனுவந்து மற்றிதனைச் சங்கப்புலவர்க்கு ஏற்பித்துரைத்தி ரென அவ்வாறே யவரும் போந்து சொல்லக்கேட்ட புலவருள் நக்கீரனாரிது குற்றமுடைத்தென்றார் என்று கூறினார்; அவர், இறைவன் புலவனாய்த்தோன்றி நீர் வழிபடும் ஞானப்பூங்கோதையார் கூந்தலு மத்தகையதோ வென்று வினவினார் என்றார்; இவர், வாளா இறைவி கூந்தலும் அத்தன்மையதோ வென்றாரென்றார்; அவர், இறைவன் றிறந்த நுதல்விழி வெப்பம் பொறாது நக்கீரனார் பொற்றாமரைக் குளத்தில் விழுந்தார் என்றார்; இவர், இறைவன் நக்கீரனாரைக் குட்டநோய் கொள்கவென அதனை யஞ்சித்தொழுத நக்கீரனாரைக் கயிலை காணிலிது தீருமென்று கூறி மறைந்தான் என்றார். இனிச் சீகாளத்திப் புராணமுடையாரும் திருப்பரங்கிரிப் புராணமுடையாரும் தம்முண் மாறுகொண் டுரைக்குமாறு காட்டுதும். சீகாளத்திப் புராணமுடையார், நக்கீரனார் கயிலைகண்டு தொழுதற் கெண்ணித் திருக்கேதார முதலிய வடநாட்டுத் தலங்களைக் கடந்து செல்லுழிச்செல்லு நெறியில் ஒரு குளமும் அதன் கரையிற் செவ்விய ஓர் ஆலமரமும் நிற்பக்கண்டு அதன் நிழலிற் சிறிதிளைப்பாறி யிருப்ப அம்மரத்தின் இலை யுதிர்வையே தலைக்கிடாகக் கொண்டு ஒருபூதம் அவ்வரை ஒரு மலைக்குகையிற் புகுத்த ஆண்டுத் தனக்கு முன்னிருந்தவரைக் கண்டிரங்கி யவர்பொருட்டுத் திருமுருகாற்றுப்படை மொழிந்து எல்லாரையும் உய்யக்கொண்டாரென்பர் திருப்பரங்கிரிப் புராணமுடையார், நாடோறும் பரங்குன்றிற் சுனையில் நாட்கடன் கழித்துத் தன்னைத் தொழாது செல்லும் நக்கீரனாரைப் பரங்குன்றின் முழையிற் சிறைப் புகுத்திப்பின் ஆற்றுப்படை பாடுவித்தார் முருகக் கடவுள் என்பர்.

இனி யிவற்றுட் பாண்டியன் றன் மனைவியொடு வைகிய வாற்றை இடமாத்திரையா னிருவரும் வேறுபடுத்துக் கூறுதலினது பெரியதொரு வேற்றுமை யாகாதென்பது. இனி இறைவன்மாட்டு அன்பு முதிர்ந்து யொருண்மேற் சென்ற பற்றைத்

முதலிய பழைய தமிழ் நூல்களா லுணர்ந்து கொள்க. வடநூலாசிரியர் தம்பாடை மேற் சென்ற கடும்பற்றுள்ளத்தாற் றமிழில் வழங்கிய மக்களியற் பெயர்களையும் வடசொல்லாற் றிரித்துக் கூறுதலிற் 'சண்பகமாறன்' 'வங்கிய சூடாமணி' எனும் இயற்பெயர்கள் தமிழ்ச் சொற்களாய்த்" தமிழில் வழங்கியவா றொருவாற்றானும் புலப்படவில்லை. அல்லதூஉம், வடநூற் றிருவிளையாடற் புராணமுடையார் தாமே படைத்திட்டுக்கொண்டெழுதியனவோ வென்று எண்ணுதற்கும் இடஞ்செய்து கிடக்கும். என்னை? ஒருவரியற் பெயரைக் கூறப் புகுந்தார்க்குப் பாடை வேற்றுமைபற்றி யதனையுந் தம்பாடையில் மொழிபெயர்த்துக்கோடல் பெரிதும் இழுக்காய் முடிதலானும், இயற்பெயரைக் கிடந்தவாறே கூறுதலாற்போந்த வழுவின்மையின் அதனை யுள்ளவாறே யுணர்ந்தார் இயற்பெயரைக் கிளந்தோதுவ ராதலானுமென்பது. இனிச் சீகாளத்திப் புராணமுடையார் தாமாராய்ந்தும் பெறப்படாத இயற்பெயரை வடமொழியிற் கிடந்தவாறே கூறுதொழிதல் பெரிதும் நன்கு மதிக்கப்படுவ தொன்றுமென்பது.

இனிக் கதை வரலாறும் ஒன்றோடொன்று மலைவு படுமாறு காட்டுதும்:—திருவிளையாடற் புராணமுடையார் பாண்டியன் இளவேனிற்காலத்தொரு நாளிளமரக்காவிற் புகுந்து தன்மனைவியொடு வைகினனெனக் கூறினர்; சீகாளத்திப் புராணமுடையார் பாண்டியன் தன் மாளிகை மேனிலைமேல் தன் மனைவியோ டிருந்தானென்றார்; அவர், தாய் தந்தையரை யிளம்பருவத்தே யிழந்த தருமியென்னும் மறைச்சிறுவன் தான் மணம் புரிதற்குப் பொருள்வேண்டி யிறைவனை யிரந்தானென்றார்; இவர், பாண்டிநாட்டில் மழைவறங் கூர்ந்து வற்கடகால மிகத்தான் வறுமையால் நலிந்து வேறு நாடு போதற் கெண்ணித் தருமியென்பவன் இறைவனை விடைகேட்ப இறைவனிரங்கிச் செய்யுள் கொடுத்தான் என்றார்; அவர், செய்யுள் பெற்ற தருமி யதனை முதலிற் சங்கப் புலவர்க்குக் காட்ட அவர் நல்லவென்று வியந்து பாண்டியனுக்குச் சென்றுரைப்ப அவனுமகிழ்ந்து தருமிக்குப் பொற்கிழி யறுத்துக்கொள்ளப் பணிப்ப அவ்வாறே போந்து தருமி



மாறனென்டர், சீகாளத்திப் புராணமுடையார் வறிதே பாண்டியனென்று கூறி யொழிந்தார்; திருப்பரங்கிரிப் புராணமுடையார் அவ்வரலாற்றை முழுவதுமே கூறுதொழிந்தார். புறநானூறு முதலிய தொகைநிலைச் செய்யுட்களை யுற்றுணர்வார்க்கு வங்கிய சூடாமணி சண்பகமாறன் எனும் பெயர்கள் புதுமையுடையனவாய்த் தோன்றும். பழைய தமிழ் வேந்தர்கட்கும் மக்களுக்கும் இடப்பட்டு வழங்கியபெயர்கள் செவ்விய தமிழ்ச்சொற்க ளாகவாதல், வடசொற்கள் விரவினும் அவை தமிழ்ச்சொற்போல மெல்லென்றிசைக்கும் மாட்சியுடையவாகவாதல் நிகழுந்தன்மையவாம்; 'பாண்டியன் அறிவுடை நம்பி,' 'நெடுஞ்செழியன்' 'உக்கிரப்பெருவழுதி,' 'மாவளத்தான்,' 'வேற்பஃறடக்கைபெரு நற்கிள்ளி,' 'இளஞ்சேட்சென்னி,' 'சேரமான்மாவெண்கோ,' 'யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும் பொறை,' 'உதியஞ் சேரலாதன்,' 'இடைக்காடனார்,' 'ஒக்கூர்மாசாத்தனார்', 'கண்ணகனார்', 'கயமனார்' என்றற் றொடக்கத்துப் பெயர்களே யிதனையினிது நிறுத்துக்கரிபோக்கு மென்பது. இனித்தமிழிற் றிருவிளையாடற்புராண மியற்றிய ஆசிரியர் இவ்வரலாறுகளைப் பன்முறை யாய்ந்து பொருந்தக் கூறுமாறின்றி வடநூலிற் கிடந்தவாறே யெடுத்துத் தமிழில் மொழி பெயர்த்திட்டார். வடநூலாசிரியர் பெரும்பாலும் ஒரு நூலியற்றப் புகுந்துழி உலக வழக்கொடும் ஆன்றோர் வழக்கொடும் மாறுபடாவாறு வரலாற்று முறைமையை யுணர்ந்து ஆய்ந்து பொருந்தக் கூறுவதின்றித் தாந்தாங் கண்டவாறே யொன்றும் பலவு மெடுத்துக்கொண்டு அவற்றை மாற்றியுங் குறைத்தும் வேறு பலவற்றை யிடையிற்புகுத்தி விரித்தும் உண்மை தோன்றுவாறு பலபடக்கூறுவர். இவ்வாறியற்றிய நூற்பொருளியல் பறியாதா ரதனையே முதனூலாகக் கொண்டு வழி நூலியற்றுவர். அங்ஙனமியற்றும்வழி யவ்வழிநூலும் அதனாற் பழுதுப்படுமா மென்பது. இனி வடநூற்பொருளைத் தழுவாது செந்தமிழ் நூலியற்றிய தொல்லாசிரிய ரெல்லாரும் உள்பொருளைக்கிடந்தவா றெடுத் துண்மைதோன்ற உரிமையின் விளக்கி யுயர்த்தாரென்பது. சிலப்பதிகாரம் பெரிய புராணம்

3L
831m, 211, 207
N31.1.1



பாதியுமாக விழுந்தது. விழுந்த இலையின் கரையிற்படிந்த ஒரு கூறு குருகாயும் நீரிற் படிந்த பிறிதொருகூறு கயலாயும் வடிவு திரிந்து, இவ்விரண்டும் இருபுறம் பதைப்பது கண்டார். கண்டு உள்ளம் நைந்து இரங்கி யவற்றினருகிற்போந்து நகத்தாற் கிள்ளிப் பிரித்து விட, அவையிரண்டும் வாயங்காந்து குருதிகா றிறந்தன. அக்கணத்தில்! அண்டாபரணன் அழன்று சீ யெதிர்ந்து 'முருகனுறையு மிக்குன்றிற் கொலைபுரிந்தனை' என்றுரைத்து வெருவப்பிடித்துச் சென்று குகையினுட் புகுத்துப் பாறை மூடிப் போயினன். நக்கீரனார் பெரிதும் வருந்தி யிது முருகனைப்பாடாக் குறையென்று அருட்குறிப்பானுணர்ந்து 'உலகம்' என்றெடுத்துக் 'கிழவன்' என்று முடித்துத் திருமுருகாற்றுப்படை யருளிச்செய்தார். இனியிதிற் 'கிழவன்' என்று முடித்தமையாற் 'கிழவனைப் வருவதற்கு நமக்கு நாட் செல்லும்' என்று கனவினருளிச் செவ்வேள் மறைந்தார்; இதனை யுணர்ந்தெழுந்த நக்கீரனார் 'இளையோன்' என முடிக்குஞ் சீரை மாற்றிக்கூறுதலும் திருமுருகன் றோன்றி யவர்க்கு அருணல்கினன் என்று சுருங்கக் கூறும்.

இனியிவைதம்முள் திருவிளையாடற்புராணம், ஆசிரியர் நக்கீரனார் 'கொங்குதேர் வாழ்க்கை' எனுஞ்செய்யுளிற் குற்றமாராய்ந்தவாறும், சிவபெருமான் அவரை யொறுத்துணர்த்திய வாறு மாத்திரமே யுரைப்பச்சீகாளத்திப் புராணம் அவர் அச் செய்யுளிற்குற்ற மாராய்ந்தவாறும், அங்ஙன மாராய்தலாற் போந்த பெருங்குற்றங்கடிதற் பொருட்டுக் கயிலைக்குச்செல்லும் வழியில் முருகக் கடவுள் திருவருளைக்கஞ் சித்திக்கப் பெற்றுக் காளத்தி மீண்டு இறைவனைத்தொழுது கிடந்தவாறும் கூறத்திருப்பரங்கிரிப் புராணம் அவர் முருகக்கடவுள் திருவருட்குறிப்பாற் சிறையிடப்பட்டுத் திருமுருகாற்றுப்படை யியற்றியுய்ந்தவாறு மாத்திரமேயோதி யொழிதன் மேற்கிளர்ந்து கூறிய மூன்று வரலாற்றையும் உய்த்து நோக்குவார்க்கு இனிது விளங்கும். இனியிம்மூவகை வரலாற்றுள்ளும், திருவிளையாடற் புராண முடையார் தன் மனைவி குழன்மணத்தை யிவர்ந்து கொண்ட பாண்டியன் [illegible] யென்றுஞ்சங்க



220458



| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |